உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

## இருபத்தைந்தாந்தொகுதி

**Vol. XXV.**

அக்ஷய—பிரபவ ௵

**1926-27.**

பத்திராதிபர்:-திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

உ

# செந்தமிழ்

## இருபத்தைந்தாந்தொகுதியின்

## உள்ளுறை:—


| விஷயம். | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|
| அந்தணர் நூல்:- | ஸ்ரீமத் சி. கணேசையர். | ௩௬௧ |
| அநபாயகுலோத்துங்கன்:- | ,, L ஸ்ரீநிவாஸையர். | ௨௭௧ |
| ௸ | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | ௩௮௫ |
| அநுதாபக்குறிப்பு:- | பத்திராதிபர். | ௧௭௬ |
| அழகு:- | ஸ்ரீமத் ச சோமசுந்தரபாரதியார் M.A., B.L. | ௪௯ |
| அன்பினைந்திணை:- | ,, K. S. நவநீதகிருஷ்ணபாரதியார் | ௨௭௮ |
| ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— | | ௨௨௭ |
| ஆறனுருபு பிறிதுரு பேற்றல்:- | ஸ்ரீமத் சி. கணேசையர். | ௨௬௫ |
| இரங்கற்குறிப்பு:- | பத்திராதிபர். | ௨0௭ |
| இரங்கற்பா:- | ஸ்ரீமத் ந. பத்மாசநி அம்மாள். | ௭௬, ௩௩௭ |
| இரங்கற்பாக்கள்:- | ,, லக்ஷ்மீநரசிம்மையர். | ௨0௮ |
| ௸ | ,, சு. நல்லசிவன்பிள்ளை. | ௨௨௩ |
| இளமையும் முதுமையும்:- | ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A, B.L. | ௫௨ |
| உரோமநாவலர் இருவரின் உபந்யாஸம்:- | ,, கிருஷ்ணசாமிபிள்ளை (B A. HONS.) | ௬ |
| ஒரு நிரூபம்:- | ,, வே. நாராயணையர் M.A., M.L. | ௩௩௨ |
| ஒரு வேண்டுகோள்:- | | ௩௮௮ |

| | | |
|---|---|---|
| ஒழுக்கம்:— | ஸ்ரீமத் ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L. | கஅஎ |
| கண்டராதித்ததேவர்:— | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | உகூஎ |
| கம்பர்:— | ,, K. G. சேஷையர் B.A., B.L. | ரு0ரு |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:— | ,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார் கக, சிஎ, அக, கஉக, கஎஎ, உருரு, ருஎஎ, ச0ரு. | |
| ஷை திரட்டில் "வந்தெதிரே தொழுதானை" என்ற பாட்டுக்கு ஒருதிருத்தஉரை:— | ஷை | ச0க |
| கம்பரைக் கற்கும் முறை:— | ஸ்ரீமத் பி. ஸ்ரீ. ஆசாரியர். உஅக, ருஉரு, ருசகூ. | |
| கருவி:— | ,, நாராயணசாமி | உகஎ |
| கிழமையும் கடமையும்:— | ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A., B.L. | க |
| குருபரம்பரை—ஆளவந்தார்வைபவம்:— | உதவிப்பத்திராதிபர். | சஉஎ |
| கூத்தரும் கல்வெட்டும்:— | ஸ்ரீமத் திரு. சோமசுந்தரதேசிகர் | ருசரு |
| கொண்கான நன்னனுடைய ஊர்களும் மலைகளும்:— | ,, வித்வான். ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியர். | கரு௬கூ |
| கோசர்:— | ஷை | ருரு |
| கோசரைப்பற்றிய சில அதிகக்குறிப்புகள்:- | ஷை | க0கூ |
| சித்தாரூடநொண்டிச் சிந்து:— | | சஉரு |
| சித்தானந்தர் மீது இரங்கற்பாக்கள்:— | ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையர். | எரு |
| சில ஆராய்ச்சி:— | ,, சி. கணேசையர். | எகூ |
| சுந்தரசோழன் என்று வழங்கும் பராந்தகன் II. | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | உசக |

| | | |
|---|---|---|
| தமிழ்ப்பஞ்சாங்க ஆராய்ச்சி:— | ஸ்ரீமத் K. V. நாராயணஸாமிஜயர் | உகஉ |
| தமிழின்தற்காலநிலை :- | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | கசஎ |
| தமிழும் தமிழரும்:— | ,, ச. சோமசுந்தரபாரதியார் M.A,B.L., | கசரு |
| தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— | | உஉரு |
| தாவரங்களின் வாழ்க்கைமருமம்:— | ஸ்ரீமத் மகரபூஷணம் ஐயங்கார் B A. | கஙங |
| திருக்குற்றால ஊடற்பிரபந்தம்:— | ,, மே. சொ. சுப்பிரமணியக்கவிராயர் | ஙஅகூ |
| திருப்புறம்பயத்துக் கல்வெட்டுகள்:— | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | ஙஙகூ |
| துளுநாட்டுக்கோசரும் அவாது செல்லூரும்:— | ,, வித்வான். ஆ. மா. சடகோப ராமாநுஜாசாரியர். | க0க |
| தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு:— | ,, P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M.A., L.T. | ஙஎக, சகஎ. |
| தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்:— | ,, மு. இராகவையங்கார். | கருங |
| பழிக்குப்பழி:— | ,, கிருஷ்ணசாமிப்பிள்ளை (B A., HONS.) | ருரு |
| பிரகிருதிசாஸ்த்ரம்:— | ,, N. R. கிருஷ்ணமூர்த்திஐயர் M.A. | உஅகூ, ஙகங, ஙகூங. |
| பிழைதிருத்தம்:— | | ஙஎ0, சஉஉ, சஙஉ. |
| மதிப்புரை:— | | சஅ, கக0, கஙஅ, கஎசு, ங0ச, ஙஙங |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தைந்தாம் வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம்:— | | கஙகூ |
| ஷை கொண்டாட்ட மங்களவாழ்த்து:— | ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. | கசங |
| | ,, M K. M. அப்துல்காதிறு ராவுத்தர். | கருஉ |

| | | |
|---|---|---|
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவு கணக்கு:— | | (பகுதி—௧—௪, ௭—௧0) |
| மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:— | | ௭௧, ௩௪௩. |
| முன்னைத் தமிழ் நாட்டுப்பெண்களின் கற்புநிலை:— | ஸ்ரீமத். சி. கணேசையர். | ௧௧௩, ௧௪௬, ௧௯௭. |
| மைசூர் மஹாராஜா அவர்கள் மீது வாழ்த்துக்கவிகள்:— | ,, மஹாவித்வான். ரா. இராகவையங்கார் | ௨0௬ |
| ஸ்வப்நவாசவதத்தம்:— | ,, ஜி. ஹரிஹரசாஸ்திரியார். | ௨௫, ௫௭ |
| ஸம்ஸ்க்ருதமும் தமிழும்:— | ,, P. V. இராமஸ்வாமி | ௧௱௧ |

---

## இத்தொகுதியில் வெளிவந்த நூல்.

[முற்றுப்பெறாதது.]

பெருந்தொகை:— ஸ்ரீமத். மு. இராகவையங்கார். (பகுதி ௨—௧௨.)

---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உரு] அக்ஷயஹூ கார்த்திகைமீ [பகுதி க.
Vol. XXV. November-December-1926. No. 1.

## கிழமையும் கடமையும்.

கிழமை, ஆவணம், உரிமை, காணி, கெழுதகைமை, தகவு, தாயம், பால், ப்ாங்கு என்பன ஒருபொருட் பன்மொழிகள். இவற்றிற்குக் கடமை, ஊழ், ஒப்புரவு, நியமம், மரபு, முறைமை முதலியன மறுதலைச் சொற்களாகும். 'கிழமையும்' 'கடமையும்' ஒன்றொடொன்றின்றியமையா இருகருத்தொருமையின் செறியியற்றொடர்பு சுட்டும். கிழமையெதுவும் உரியநேர் கடமைவேறின்றிநிற்கும். கடமைகதுவா உரிமையெதுவுங் கருதற்கில்லை. எனில் இவை சிறுபான்மை ஓரிடத்தோன்றியும் பெரும்பாலும் இருதிறப்பட் டிருவேறிடத் திணைந்தும் நிற்கும். ஒருவர்மீ தோன்றினும், இருவர்பால் இணையினும், ஒவ்வோருரிமைக்கும் உரியநேர் கடமையே பற்றுக்கோடாம்: அதுவேபோல், ஒவ்வொரு கடமையும் மற்றதன் உரிமையினுக்கு ஆணிவேராம். உதாரணமாக, ஒருபொருளில் ஒருவர்க்கு உரிமையுளதாமேல், அதனை மறுமுறைமையும் அப்பொருளில் தாம் உரிமைதேடாமையும் பிறர்பேணுங் கடனுதல் வேண்டும். மனைவியாற் பேணப்பெறும் மகனுரிமை, மனையாளைப் பாதுகாக்கும் அவன் காதற்கடனை ஆதாரமாகவுடைத்து. பொதுவுடைமைப்பொருள்களிலும், உடையவர் ஒவ்வொருவர் உரிமையும் மற்றுரி

யோர் மறாதுபேணுங் கடமையளவன்றி நிலைபெறாது: சரியுரிய பிறர் கிழமை எனைத்தேனுங் குறையாமை குறித்தொழுகல், உடைப்பொருளி னுரியவருள் ஒவ்வொருவர் கடமையாகும். கடமைக்காளான்றாத உரிமைப்பாடு உருப்படாது. எனவே, ஒவ்வோருரிமைக்கும் உரியவன் தன்பாலேனும் அன்றிப் பிறர்மேலேனும் ஆன்றநேர்கடமை யூன்றி வேர்கொள்ளல் இன்றியமையாததாகும். யாண்டுங் கடமைகொள்ளாக் கிழமை ஏதுமில்லை. கிழமையெல்லாம் தமக்குரிய கடமைதருந் துணைதழுவியல்லாமற் றமித்துநில்லா.

இன்னும் ஊன்றிநோக்கின், இவற்றின் இடையகலாத் தொடர்பின் இயல்பும் செறிவும் இச்சொற்கள் ஒவ்வொன்றுமே இனிது விளக்கும். 'கிழமை'ச்சொல்லே நேர்முகமாய் உரிமைத்தொகையும், அவாய்நிலையான் அதற்குரிய 'கடமை'வகையும் கிளப்பதாகும்: அதுவேபோல், 'கடமைக்'கிளவியும், செம்பொருளாற் கடப்பாடும், குறிப்பியல்பால் அதற்குரிய கெழுதகவும் இசைத்துச்சுட்டும். 'கிழமை' 'கடமை' என நாம் கிளக்கும் இருசொற்கருத்தின் ஒருப்பாட்டுயர்வு, ஈருடல் ஒருயிரென ஒத்துயர்நற் காதலிற்கலந்தவர் கூட்டுறவொக்கும். ஒருபாலிருவர் உவந்துநட்டாலும் இருமையியல்பு ஆண்டு இறக்குமாறில்லை: இருபாலிருவர் மருவுநன்மணமே இருமையழித்து வாழ்வொருமை வற்புறுத்தும். கிழமையும் கடமையும் தழுவிநின்று என்றும் நல்லுழுவலோடொன்றிநிற்கும். உரிமையோடுரிமை நேரொருவவொல்லா: கடமையைக் கடமையே கதுவிநில்லா. என்னுரிமை பிறர்கடமையொடு இணையுமல்லால், மற்றவருரிமையுடன் ஒன்றுறாது. எல்லாம் கிழமையும், யாண்டும் கடமையும், நிலைபெறில்லை; நில்லாமையொன்றே? நினையுங்கால் ஒல்லாப் பொருளில் சொல்லாய்ச் சுவறும்.

"நல்லதொல் லகம்புறத் தெல்லையின் யாண்டும்
இல்லறம் இறையியல் எல்லாத் துறையினும்

செல்லுமின் முறையியற் செவ்விசீர் தூக்கித்
தம்முறு கிழமைபோற் றம்வயிற் கடமையும்
தவாது தழுவிச் சமநிலை புணர்த்திப்
பிறர்மேற் கடமையே பேணுதல் குறைத்து
மற்றவ ருரிமையை மறவா தோம்பிப்
பிறர்பாற் கிழமையும் தம்மேற் கடமையும்
துறவா அறநற் றுணையாக் கொண்டாங்
கொல்லும் வகையா னுேவா தறவினை
செல்லும்வா யெல்லாம் விரும்பிச் செய்ய" வல்ல

சால்புடைய் மக்கட்சமுதாயமே வளம்படவளரும் வாழ்வினையுடைத்தாம். தம்மிடையேனும் பிறர்புடையேனும் என்றும் யாண்டும் உரிமையுங் கடமையும் ஒன்றிநின்றன்றி யொழுகலாறில்லை. இறையளவுங் குறையா திணையினன்றி, இருபுடைபொருசீர் அறவுருப்பட்டு இவை உயிர்த்தல் இல்லை: கேவலம் கூட்டத்தான்மட்டும் பொருளெதுவும் புத்துயிர்பெற் றியங்கொணுது. இயலறத் தளவைமுறைபிறழா திணையுங்காலே, அவ்விணக்கத்தால் இனிய புதுவாழ்வுபெற் றியங்கக் காண்பாம். நீர்க்காற்றும்* உயிர்வளியும்† நிறையின்றிக் கலந்துலவும் நெடுவிசும்பில் அவை நீராக மாறுவதில்லை. அவைதமையே பிரித்து இரண்டுக்கொன்றுகு மளவுபடச் சேர்க்கிற்பின், அவ்வாயுக்கள் தம் இயற்கைப் புணர்ச்சியால் இரண்டறக்கலந்து இனிய தெண்ணீர்த் துளியுருப்பெற்றுத் திகழக் காண்போம். மற்றும் உடற்பொருள்களெல்லாம் உலகில் தனிநிலையில் நிரம்பிநிற்கவும், அப்பொருள்களின் அளவிறந்தகூட்டத்தால் உடலுருப்படுகின்றிலது. அவ்வவ்வளவு முறையில் அப்பொருள்கள் கூடிப்புணருங்கால், உடலுருப்பட் டுயிர்த்தியங்குவதாகும். உயிருடலியக்கமுமே இணைய கூட்டுறவறத்தின் வரம்பிறந்திலது. உயிரற்றவுடல் பிணமும், உடல்பெறு வுயிர் அலகையுமாவதன்றி, வியப்பொடு வனப்பால் விளங்கும் உயிர்மெய்ப்பியக்கம் அவ்விரண்டின் பிரிபாக்கூட்டுறவளவே யமைந்துநிற்கும். இதுவே இரண்டறுமிணக்கத் திறவாநல்லறத்தியல்பாகையால், இவ்வறத்தொடுபட்டுக் கலந்தமைந்தொன்றிய

---

* நீர்க்காற்று = ஜலவாயு (Hydrogen). † உயிர்வளி = பிராணவாயு (Oxygen).

கடமையும் கிழமையுமே சமுதாயவாழ்வினுக் கின்றியமையாத உயிர் வாய்வாகும். அவற்றின் அளவியல்புகளின் நிலைபிறழ்ந்த சமுதாய மெதுவும், வளம் வறக்க வாழ்விறக்கும்.

மேவனபுரிந்தொழுகும் மேலை ஐரோப்பியருள், உரிமையே பெரிதும் ஓம்பப்பெறுகின்றது. யாவரும் தத்தங்கிழமைநாடுவதும் தம் கெழுதகைமை குன்றியுங் குறையாவாறு முறைகளையும் அறத்துறைகளையும் வகுப்பதுமே மேற்றிசை யாற்றிவரும் ஆசாரத் தளைவிநிறையாம். பிறரும் உரிமைபேணுவரென்பதோ ருணர்ச்சியொழியப் பிறிதெல்லையறியாதஉரிமையுணர்வே இவர் நாகரிகத்தின் அடிப்படையாகும். யாரும் யாண்டும் சமுதாய இயல்வாழ்வில் உரிமைநேர் கடப்பாடும் ஒதுக்கொணு உளதாய அறமுதலாகக் கருதுவதில்லை. உரிமையே பேணிக் கடமை கருதா இம்மக்கட்சமுதாயம், பெண்மைப்பெருநலம் வறந்த ஆடவர் பேரீட்டமாகி, மணவளம் மலர்ந்து இருபாலியைந் தொருவாழ்வுயர்ந்தோங்கப்பெறுது, ஆழ வேரூன்றி அரும்பயன்தரும் பெருமரமாகாது, புறக்காழுடைய புல்லினம்போன்றதாகும்.

இனி, அளந்தறியாத் தொன்மையின் வளந்தலைநிற்குஞ் சீனர்தம் முட் கடமை பெரிதும் அளவுகடந்து வற்புறுத்தப்பெறுகின்றது. சான்றாண்மையெல்லாம் தவாக்கடனாற்றல் என்பது அவர் அறக்கோள். தங்கடனாற்றல் சீனர்க்கு அனைத்தறமுமாம். தாங்கடமையேற்றல் பிறருரிமை போற்றலாவதேபோல், தம்முரிமைகொண்ட பிறர்கடனுமூண்டென்று அவர் சிறிதுஞ் சிந்திப்பதில்லை. நாளடைவிற் சீனர், உரிமையுடைய மக்கணிலைப் பெருமிதவுணர்ச்சி வீழ, அகத்தும் புறத்தும் அடிமைநிலை யாழ, தாளாண்மை தலைநின்றும் வாளாண்மையற்ற வேளாண்மையுற்று, மணவா மலரா இலைமலியும் புதர்போலானர்.

இவ்வாறு, கடமையிகந்து கிழமைவிழைந்தொழுகும் மேனாட்டார் சமுதாயவியல் எழிலற்ற வன்சிலையும் நிறையற்ற பெண்ணலமும் போன்றதாகும்: கிழமைநலமிழந்து கடமைச்சுமையே கருதும் சீனர் நாகரிகம் ஆண்மைவளம் அறவும் அடிமைநிலை உறவும் ஆறுகொண்டமைந்துநிற்கும். உரிமையுங் கடமையும் ஒன்றிநின்றிலகுஞ் சமுதாயமே, மணமும் வனப்பும் மாண்ட நன்மலர்போல், வளத்தொடு வீரமும் வளர்த்து உயர்வாழ்வுபெற் றோங்கிவளரும். கடமையுங் கிழமையும்

புடையொருங்கொத் திணைந்துலவும் நற்சமுதாயம் நின்றுநிலவும். எனிற் கடனெல்லாம் ஒருபுடையும் உரிமையனைத்தும் பிறிதிடத்தும் அமையுமெனும் நியதியில்லை. சமுதாயமக்கள் இவையிரண்டும் சம நிலைதவா திணைந்திலக வொழுகலொன்றே அறமாகுமன்றி, இவற்றை இடம்வகுத் தொதுக்கல் இன்றியமையாததன்று. இவற்றின் இணக்கத் துக்கு இவை ஓரிடத்தொன்றிநின்றாலும், ஈரிடத் திணைந்துசென்றா லும் பிணக்கமில்லை. தணவாப் பிளவாப் புணர்வே வேண்டும். அர சுக்கு இறைப்பொருளுதவுங் கடமையுடைய குடிமைக்கு, பகைதகை யாது தன் உடல்பொருள்களின் பாதுகாவலை இறைமையிடம் பெறும் உரிமையுண்டு. வரிவாங்கும் வேத்துரிமையைக் குடியோம்பும் கடமை விலைகொடுத்தன்றி இறைமையும் பெறுமாறில்லை. இவ்வாறு இறை மையுங் குடிமையும் முறையே தத்தங் கிழமையும் அதற்குரிய கடமை யும் தாந்தாந்தாங்க, அவையும் ஒருபுடையொன்றிநின் றுருப்படச் சமுதா யம் ஓங்கி வளரும். அன்றிக் குடிமையின் இறைக்கடன் அதுபெறும் வேத்துரிமை தாங்கவும், பாதுகாவல் இறைமையிடம் கடமையாய்க் குடிமையிடம் உரிமையாகவும் நின்று, இவையே இருபுடை யொருபய னுருவாய்ச் சமுதாயப்பெருநலம்பேணும் ஒருதிரு வொண்பொருள்சுட் டும் இருசொல்வழக்காய்வருவதும் இயல்பாம். ஆகவே ஓரிடத்தொன்றி யும் ஈரிடத்திணைந்தும் கடமையும் கிழமையும் நடைபெறல் முறை யாம்—ஒன்றற்கொன்று குறைநிறைக்கும் அனுபந்தமன்று: எனினும் ஒன்றின்றி மற்றைபது சம்பூர்ணமாகாது. ஒன்றைவிட்டொன்று பொருளும் தனிவழக்கு முடையதேனும், பிரிந்த தனிநிலையில் இவை ஒவ்வொன்றும் மணந்து மகப்பூத்துப் பெண்ணியல் மலராத மகளும் கற்புமேம்படு காதலியால் இல்மாண்பின் வீறுபெறா மகனும்போல் நறு மணநல்லியல் மலரப்பெறாத குறுவாழ்வுடைய கிளவியளவிற்றாய்நிற்கும். இயலறமுறையில் இவை இணைந்தியங்குங்காற் சமுதாயப்பெருவாழ்வுக் கின்றியமையாத உயிர்க்காற்றும் மக்களினஒப்புரவொழுக்கச் சூழ் வளம் படவளர்க்கும் அறஞாயிற்றின் மறக்கதிர்களுமாகி யொளிரும்.

ச. சோமசுந்தரபாரதி.

---

# உரோமநாவலரிருவரின் உபந்யாஸம்.

[இது ஜெகப்பிரியரின் ஜூலியஸ்ஸீஸர் நாடகத்தில் வரும் ஆங்கில உபந்யாசங்களின் மொழிபெயர்ப்பு.]

## கதைச் சுருக்கம்.

நுண்ணறிவே மன்னுயிராய் அவதரித்த திசைபுகழாங்கிலச்சேப்பியரை ஆங்கிலமறியாதாருங்கூடத் தெரியாதிருப்ப தருமை. என்றுமிறவாது நின்றுநிலவும் அவர் (பெரு) நூல்பலவற்றுள் யூலியஸ் ஸீஸர் என்பதும் ஒன்றாம். இற்றைக்குச் சுமார் இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்னர்ப்புகழொடுதோன்றிப்பின் உடலளவில் துகளொடுசென்றிடினும் இன்றளவும் நின்றுலவும் பொன்றாப்புகழுடம்பைப்பெற்றுப் பெயர் பெற்ற வீரனுவான் யூலியஸ்ஸீஸர் என்பான். இன்னவன்கதையே இவன் பெயர்கொண்டகதையில் ஒப்புயர்வில்லாச் சேப்பியவல்லோன் திறம்பட விரித்துச் சுவைப்படக்கதைப்பதாகும். ஈண் டிவன்கதைவிரிப்ப தெம் விசாரணையில்லை. எடுத்தவிஷயத்திற்கு வேண்டுமளவு சொல்லிச் செல்லுவாம்.

ஆற்றலும் ஆண்மையும் ஏற்றம் பயக்க எத்திசையும் வெற்றிக் கொடிநாட்டித் தனைப்பெற்ற தாய்நாடாம் உரோமுக்குக் கொற்றத்தார் சூட்டி மணிமுடி அணிந்திடாக் கொற்றவனாய் விளங்கிநின்றான் யூலியஸ் ஸீஸரென்னும் நாமமணிந்திட்ட வீரசிகாமணி. ஒனில் ஜனசமூகத் தலைமை ஒருங்கே நெடுநாள் நிலைத்திருப்பது நிலையிலா இவ்வுலகிற் கொரு புதுமையேயாகும். நேற்றிருந்த தலைவன் இன்று தலைதுணிவன், நாளை மறுபடி எழுவன், பிற்றைநாளறவே ஒழிவன்; என்னும் பெருமை யுடைத் திவ்வுலகு. யூலியஸ் ஸீஸரும் இந்நிலையிலா அலைதவழ்வேலையி லகப்பட்டு அதற் கிரையான பலரி லொருவனே.

இவன் பெருமிதப் பெருங்குணத்தை அறிந்த சிலர் அழுக்காற்றால் இழுக்கப்பட்டு இவனை வெறுத்ததுடனில்லாமல் இவனழிவுசூழ்ந்து வினைமேற்கொள்வாராயினர். காஸியஸ் புரூட்டஸ் என்போர் பலருடன்

கூடிச் சூழ்ச்சிசெய்து பங்குனித்திங்களில் நடுநாளில் நண்பகலில் இவ னுயிருண்பதாய் ஏற்பாடுசெய்தார்கள்: அத்தினத்தில் அத்தாணிமண்ட பத்தில் அனைவரும் குழுமினர்: ஸீஸருக் காளனுப்பினர். முன்னிரவில் ஸீஸரின் அறமனையாள் கல்பூர்ணியா நள்ளிருளிற் கொள்ளிப்பேய்க் கனுக்கள்கண்டு பள்ளிகொள்ளாது துள்ளியெழுந்து பொழுதுபுலரு மட்டும் துயிலொழிந்து, விடிந்ததும் காதலனிடம்சென்று கண்ட துரைத்து அன்று அத்தாணிக்குப் போகவேண்டாவென்று குறை யிரந்து மன்றுடிக் கெஞ்சிக்கேட்டாள். தாரை தடுக்கவும் மறுத்து விரைந்த வாலியின் உறுதிநிறை தீரநெஞ்சுபடைத்த திறல்வீரனும் ஸீஸர் பேதைப்பெண்ணுவாள் "பெண்மையாற் பிழைக்கின்ரு"ளென் றெண்ணி ஒன்றிரண்டு சொல்வான்: "ஆறிலோ நூறிலோ ஒருநாள் இறப்பது றுதி என் றறிந்தபின்னும் மானிடர் துஞ்சுதற் கஞ்சுவதே யா னிதுவரை கேட்ட அதிசயங்களினும் பேரதிசயமாகும். இன்னும் பெண்பாவாய்! 'கூற்றும் என்பெயர் சொலக் குலையும்'. கூற்றுவனே நன்கறிவன் ஸீஸர் அவனுக்கே கூற்றுவனென்று" என்று இனைய பல வீரமொழிமுழங்கித் தன் னறக்கிழத்தியிடம் விடைபெற்றுத் தீரன் விரைந்தனன். அத்தாணி சென்றதும் புரூட்டசும், காஸியசும் ஸிம்பரின் சகோதரனை மன்னிக்கவேண்டுமென்று வேண்டிநின்ருர். துருவனனைய நிலைத்த தன் உறுதிமனதை மாற்றுவ தசாத்தியம் என்று ஸீஸர் மறுமொழிதந்தான். குழுமியிருந்த சிலர் ஒன்றிரண்டு சொன்னுர்; அதற்குள் காஸ்கா சீசரைக் குத்தினன். எல்லோரும் வெட்டினுர்கள். நீயுமா புரூட்டஸ் என்று மனங்கசிந்துருகிய பசைந்த சொல்லோடு திசைபுகழ் ஸீஸர் மண்மிசைவீழ்ந் துயிர்நீத்தான்.

சுதந்திரம் சுதந்திரம் என் றெல்லோரும் கத்திக்கொண்டு குழப்பத் துடன் ஓடினுர்கள். இவ்வமயந்தான் புரூட்டஸ் பின்வருமாறு பேசலுற்ருன்.

புரூட்டஸ்:— கடைசிவரை அமைதியாயிருங்கள். உரோமர்களே! நாட் டோர்களே! அன்பர்களே! என்கொள்கையறியச் செவிசாயுங் கள். நீங்கள் கேட்டுணரும்பொருட்டு அமைதியாயிருங் கள். என்வாய்மைகொண்டு என்னை நம்புங்கள். என் சொல் லில் நம்பிக்கையுண்டாகும்பொருட்டு என்வாய்மையில்

மதிப்புவையுங்கள். உங்கள் நல்லறிவுகொண்டு என்னை நிதானியுங்கள். நிறுத்து நிதானிக்கும்பொருட்டு உங்கள் புலன்களுக்கு உணர்வூட்டுங்கள். இந்தக்கூட்டத்தில் யாரேனும்-ஸீஸரின் பிரியநண்பன் யாரேனும்-இருப்பானுனல், அவனுக்கு நான் சொல்லுகின்றேன்; ஸீஸர்மேல் புருட்டசுக்குள்ள காதல் அன்னவன்காதலுக் கொருசிறிது மிளேத்ததில்லே. பின், ஏன் புருட்டஸ் ஸீஸருக்கு எதிர்த் தெழுந்தான் என் றந்தநண்பன் வினவின் இதுவே என் பதிலாகும்: ஸீஸரை நான் குறையக் காதலித்ததில்லே. ஆனுல் உரோமை அதிகமாகக் காதலித்ததுண்டு. ஸீஸர் உயிரோடிருக்க நீங்கள் எல்லோரும் அடிமைகளாய்மடிய விரும்புகிறீர்களா? அல்லது ஸீஸர் மடிய நீங்கள் சுதந்திரக் கொடியுடையராய் (சுகமாக) வாழவிரும்புகிறீர்களா? ஸீஸர் என்னை நேசித்தான்; அவனுக்காக நான் வருந்துகின்றேன். அவன் பாக்கியசாலி; அதற்காக நான் மனம்பூரிக்கின்றேன். அவன் ஒரு தீரவீரன்; அதற்காக நான் அவனைக் கொண் டாடுகின்றேன். ஆனுல் அவன் பேராசைகொண்டான். அதனுல் நான் அவனைக் கொன்றேன். அவன்காதலுக்கு இதோ என் கண்ணீர்; பாக்கியத்திற்கு இதோ மனமகிழ்ச்சி; வீரத்துக்கு இதோ கௌரவம்; பேராசைக்கு இதோ பேரழிவு. புல்லடிமையாயிருக்கவிரும்பும் பேடி யார் இங் கிருக்கின்றுன்? யாருமுளனேல் உரைத்திடுக. அவனை நான் விசனப்படுத்தியவனுகின்றேன். உரோமன் இல்லா திருக்கவிரும்பும் கொடியவன் யார் இங்கிருக்கின்றுன்? யாருமுளனேல் உரைத்திடுக, அவனை நான் விசனப் படுத்தியவனுகின்றேன். தன் தாய்நாட்டைக் காதலியாத தேசத்துரோகி யார் இங்கிருக்கின்றுன்? யாருமுளனேல் உரைத்திடுக. அவனை நான்விசனப்படுத்தியவனுகின்றேன். பதிலே எதிர்பார்க்கிறேன்.

நகரத்தோர்:— யாருமில்லே; புருட்டஸ்! யாருமில்லே.

புருட்டஸ்:— அப்படியானுல் நான் யாரையும் விசனப்படுத்தினவனில்லே. நீங்கள் புருட்டசுக்கு எவ்வளவுசெய்வீர்களோ அதைவிட

நான் ஸீஸருக்கு ஒன்றும் அதிகமாகச் செய்துவிடவில்லை. அவன்மாணத்தின்செய்தி நகாப்போத்தாணியிற் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவனடைதற்குரிய பெருமை சிறிதும் குறைக்கப்படவுமில்லை. மரணத்துக்கேகாரணமாயிருந்த அவன் தவறுகள் வற்புறுத்தப்படவுமில்லை. அழுதுகொண்டுவரும் மார்க் அந்தோனியுடன் இதோ அவன்பிரேதம் கொண்டுவரப்படுகிறது. (அந்தோனியும் மற்றோரும் ஸீஸர் பிரேதத்துடன் வருகிறார்கள்) அந்தோனி இந்த மரணத்திற் சம்பந்தப்படாவிடினும் ஸீஸர் இறந்ததன் நற்பயனை அடைவான்.—குடியரசியலில் ஓராசனம்; உங்களில் யாரே அப்பயனடையாதார்? என் ஆழ்ந்த பேரன்பனை உரோமின் நன்மைக்காக நான் வீழ்த்தினது போல் என் முடிவை என் நாடு வேண்டுங்கால் என்முடிவுக்கான வாளும் என்னிடமிருக்கிறது. இதனுடன் நான் விடைகொள்கின்றேன்.

நகரத்தோர்:—வாழ்க. வாழ்க. புரூட்டஸ்! வாழ்க.

1ம் நகரவாசி-வெற்றிமாலையுடன் அவனை வீட்டுக்குக்கொண்டுபோவோம்.

2ம் ந வாசி:—அவனுக்கும் அவன் முன்னோர்க்கும் சிலை அமைப்போம்.

3ம் ந வாசி:—அவனை ஸீசராக்குவோம்.

4ம் ந வாசி:—புரூட்டஸிடமுள்ள சீசரின் உயரியகுணங்களைப்புகழ்ந்து கொண்டாடுவோம்.

1ம் ந வாசி:—ஆரவாரத்துடனும் முழக்கத்துடனும் அவனை வீட்டுக்குக் கொண்டுபோவோம்.

புரூட்டஸ்:—என் நாட்டோர்களே!

2ம் ந வாசி:—சத்தமிடாதீர்-அமைதி. புரூட்டஸ் பேசுகின்றான்.

1ம் ந வாசி:—அமைதியாயிருங்கள்.

புரூட்டஸ்:—எனது நல்ல நாட்டோர்களே! நான்மட்டும் போக விடை கொடுங்கள், எனக்காக அந்தோனியுடனிங்கிருங்கள்,

சீசரின்பிரேதத்திற்கு மரியாதைசெய்யுங்கள். சீசரின் பெருமைபோற்றும் அந்தோனியின் பேச்சையும் பெருமைப்படுத்துங்கள். எங்கள் அனுமதிபெற்று அந்தோனி இங்குப்பேசுகின்றான். அந்தோனி பேசிமுடியும்வரை என்னைத்தவிர நீங்களொருவரும் போகாதிருக்கும்படி உங்களை நான் வேண்டுகிறேன்.

1ம் ந. வாசி:–நில்லுங்கள். அந்தோனி பேசுவதைக் கேட்டுப் போகலாம்.

3ம் ந. வாசி:–அவன் மேடையிலேறட்டும்; நாம் கேட்போம். அந்தோனி! மேலே ஏறுக.

அந்தோனி:—புரூட்டஸிற்காக உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

4ம் ந. வாசி:–புரூட்டஸைப்பற்றி என்ன சொல்லுகின்றானவன்?

3ம் ந. வாசி:–புரூட்டஸிற்காக நமக்கெல்லாம் கடமைப்பட்டிருப்பதாய்ச் சொல்லுகின்றான்.

4ம் ந. வாசி:–புரூட்டஸைப்பற்றி அவன் தவறாய்ப் பேசாதிருப்பதே நல்லது.

1ம் ந. வாசி:–இந்தச் சீசர் ஒரு கொடியனே.

3ம் ந. வாசி:–ஓ அது நிச்சயமே. அவன் உரோமிலிருந்து ஒழிந்தது நம் நல்லகாலமே.

2ம் ந. வாசி:–அமைதியாயிருங்கள். அந்தோனி சொல்லப்போவதைக் கேட்போம்.

அந்தோனி:—சாந்தமுள்ள உரோமர்களே!

நகரத்தோர்:—சத்தமிடாதீர்-அவனைக் கேட்போம்.

அந்தோனி:—நண்பர்களே! உரோமர்களே! செவிமடுத்துக் கேளுங்கள். நான் சீசரைப் புதைத்திட வந்திருக்கின்றேன். அவன் பெருமை பாட வரவில்லை. மனிதர்செய்யும் தீச்செயல்கள் அவரிறந்தபின்புநின்று நிலவுகின்றன; அவர்நற்செயல்கள்

அநேகமாக அவரெலும்புடனே புதைக்கப்படுகின்றன. சீசர்விஷயத்திலும் அவ்வாறே ஆகுக. பெருந்தன்மை வாய்ந்த புருட்டஸ், சீசர் ஒரு பேராசைபிடித்தவனென்று சொல்லினன். அவ்வாறாயின் அது பெரியதொரு தவறே: அதற்குச் சரியாகவும் பெரிதாகவுமே சீசர் உத்தரவாதம் செய்திருக்கிறான். புருட்டசும் ஏனையோரும் பெருந்தன்மைவாய்ந்த பெரியோராதலால் இன்னோராணைபெற்றுச் சீசரின் அந்தியச் சடங்கில் நான் பேசவந்திருக்கின்றேன். அவன் (சீசர்) எனது நண்பன்; என்னிடம் விசுவாசமும் பக்ஷபாதமின்மையு முடையவன். ஆனால் புருட்டஸ் அவனொரு பேராசைக்காரனென்று சொல்லுகின்றான்; புருட்டஸ் ஒரு பெருந்தன்மைவாய்ந்த பெரியோனே. சீசர் நம் உரோமாபுரிக்கு அநேகரைச் சிறையெடுத்துக்கொண்டு வந்ததுண்டு. அவர்விடுதலைப்பணமெல்லாம் அரசாங்க நிதியறையையே நிறைத்தன. சீசரின் இச்செயல் அவன் பேராசைக்காரன் என்று காட்டுகிறதா? தஞ்சமற்ற பஞ்சையர் கதறியபோது சீசர் அழுததுண்டு. பேராசையோ கல்லினும் கடியமனதுகொண்டிருக்கவேண்டும். எனினும், புருட்டஸ் அவனொரு பேராசைக்காரனென்று சொல்லுகின்றான்; புருட்டஸ் ஒரு பெருந்தன்மைவாய்ந்த பெரியோனே. திருவிழா (Lupercal) அன்று நான் சீசருக்கு மூன்றுதரம் கிரீடத்தை அளித்ததையும் மும்முறையும் அவனதை மறுத்ததையும் நீங்களெல்லோரும் பார்த்திருந்தீர்கள். இது பேராசையாமா? எனினும், புருட்டஸ் அவன் பேராசைக்காரன் என்கின்றான்; புருட்டஸ் நிச்சயமாக ஒரு பெருந்தன்மைவாய்ந்த பெரியோனே. புருட்டஸ் சொன்னதை நான் மறுத்துச்சொல்லவில்லை. ஆனால் எனக்குத்தெரிந்ததைச் சொல்லவே நான் இங்கு முன்வந்தேன். அவனை (ஸீசரை) ஒருகாலத்தில் நீங்களெல்லோரும் நேசித்தீர்கள் (அதற்குக்) காரண மில்லாமலில்லை. எந்தக்காரணம் பின் உங்களை அவன்மரணத்தில் வருந்தவொட்டாது தடைசெய்கின்றது. ஆய்ந்தறியும் அறிவே! நீ

கொடியவிலங்கினத்திடை ஓடிவிட்டாய். மானிடர் அறிவை அறவே இழந்தனர். என்னை மன்னியுங்கள். என்னிருதயம் அந்தப் பிரேதப்பெட்டிக்குள் ஸீசருடனிருக்கிறது. என்னிடம் அது மீண்டு வரும்வரை சிறிது நான் பேசாதிருக்கவேண்டும்.

1ம் ந. வாசி:—அவன்சொல்வதில் நிரம்ப நியாயமிருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது.

2ம் ந. வாசி:—இந்த விஷயத்தை நீவிர் சரியாக யோசித்துப்பார்த்தால் ஸீசரிடம் பெருங்குற்ற மிருந்திருக்கிறதென்பது விளங்கும்.

3ம் ந. வாசி:—இருந்ததா? பெரியோர்களே! அவனுக்குப் பதிலாக அவனிடத்தில் அவனிலும் கொடியனே வருவானென்று நானஞ்சுகின்றேன்.

4ம் ந. வாசி:—அவன் சொன்னவார்த்தைகளைக் கவனித்தீர்களா? கிரீடத்தை வேண்டாமென்று வெறுத்தான். ஆகவே, நிச்சயமாக அவன் பேராசைக்காரனல்லவே.

2ம் ந. வாசி:—பாவம், அழுதழுது அந்தோனிகண்கள் தீயெனச் சிவந்திருக்கின்றன.

3ம் ந. வாசி:—அந்தோனியைவிடப் பெருந்தன்மைவாய்ந்தவன் இந்த உரோமிலே இல்லை.

4ம் ந. வாசி:—கவனியுங்கள். அந்தோனி பேச ஆரம்பிக்கின்றான்.

அந்தோனி:—ஆனால் நேற்று இந்தச் ஸீசரின்வார்த்தை உலகிற்கெல்லாம் எதிர்நின்று தொனித்திருக்கும். அவன் யாரேனும் கவனிப்பதற்கின்றி இன்றதோ கிடக்கின்றான். காஸியசும் புருட்டசும் பெருந்தன்மைவாய்ந்தவர்களென்று நீங்களறிவீர்கள். மகாஜனங்களே! உங்கள் இருதயத்தையும் மனசையும் கலாம் விளைப்பதற்கும் கோபமூட்டுதற்கும் ஆரம்பிப்பேனானால் இப்பெரியோர்க்குத் தவறிழைத்தவனாவேன். அவர்களுக்கு நான் தவறிழைக்கமாட்டேன். இறந்தவருக்காவது தவறிழைப்பேன்; எனக்கும் உங்க

ளுக்குமாவது தவறிழைப்பேனன்றி இத்தகைய பெருந் தன்மைப் பெரியோர்க்குத் தவறிழைத்துத் தவறமாட்டேன். இதோ சீசர் முத்திரையிட்ட தோற்பத்திரம். அவனறையில் அதைக் கண்டேன். அது அவனது உயிலாகும். நான் அதைவாசிக்கப்போவதில்லை. மன்னியுங்கள். மகாஜனங்கள்மட்டும் இதைக் கேட்பார்களானால் மண்ணுலகு நீத்த சீசரின்காயங்களை முத்தமிடுவார்கள்; அவன் பரிசுத்தமான இரத்தத்தில் தங்கள் மேலாடைகளை நனைத்துக்கொள்வார்கள்; இதுமட்டோ? அவன் ஞாபகார்த்தத்தின்பொருட்டுச் சீசரின்உரோமம் வேண்டுமென்று மன்றாடிக்கேட்பார்கள்; அந்தியகாலத்தில் தங்கள் உயில்களிற் கண்டெழுதி அவர் சந்ததியார்க்கு இப்பெருஞ்செல்வம் தந்திடுவார்கள்.

4ம் ந. வாசி:—உயிலை நாங்கள் கேட்கட்டும். அந்தோனி! அதைப் படித்திடுக.

நகரத்தோர்:— சீசரின்உயிலை நாங்கள் கேட்டேதீரவேண்டும்.

அந்தோனி:—பொறுமைகொள்வீர்களாக. என் சாந்தமான நண்பர்களே! நான் அதை வாசித்திடலாகாது. சீசர் உங்களை நேசித்த தன்மை நீங்களறிவ துசிதமில்லை. நீங்கள் கட்டைகளில்லை; நீங்கள் கருங்கல்லுமில்லை. ஆனல் மனிதர்கள். மனிதர்களாகவே நீங்க ளதைக் கேட்பீர்களானல் உங்களை அது கனன்று அழலச்செய்யும், உங்கள்புத்தியைத் தடுமாறச் செய்யும். நீங்கள் அன்னவன் பின்னுரிமையாளர் என்றறியாதிருப்பதே மிகவும் உத்தமம். அறிவீர்களானல், அந்தோ, அதினின்று விளைவதென்னே!

4ம் ந. வாசி:—உயிலை வாசித்திடுக. நாங்கள் கேட்கட்டும். அந்தோனி! நீ அதை எங்களுக்கு வாசித்திடவே வேண்டும்.

அந்தோனி:—நீங்கள் பொறுமையுட னிருக்கமாட்டீர்களா? சிறிது தாமதிக்கமாட்டீர்களா? உங்களுக்கு நான் அதைச் சொல்லியதே என்தவறாகும். சீசரை ஈட்டிகொண்டு கொன்ற

பெருந்தன்மைப்பெரியோர்க்கு நான் தவறிழைத்திட அஞ்சுகின்றேன்: நான் பெரிதும் அஞ்சுகின்றேன்.

4ம் ந. வாசி:-அவர்கள் துரோகிகள், பெருந்தன்மைப் பெரியாரா?

நகரவாசிகள்:-உயில்! உயில்!

2ம் ந. வாசி:-அவர்கள் கொடுந்துஷ்டர்கள், கொலைஞர்கள். உயில்-உயிலைப் படித்திடுக.

அந்தோனி:—நீங்கள் உயிலை வாசிக்கும்படி கட்டாயப்படுத்துகிறீர்களா? அப்படியானால் சீசரின் உடலைச் சுற்றி நில்லுங்கள். உயிலெழுதிவைத்த உபகாரியை உங்களுக்கு நான் காட்டட்டும். நான் இறங்கட்டுமா? நீங்கள் விடைதருகிறீர்களா?

நகரவாசிகள்:-கீழேவருக.

2ம் ந. வாசி:-இறங்குக. (அந்தோனி இறங்குதல்.)

3ம் ந. வாசி:-விடைதந்தோம்.

4ம் ந. வாசி:-சுற்றிநில்லுங்கள்.

1ம் ந. வாசி:-பிரேதவண்டியிலிருந்து நில்லுங்கள். பிரேதத்தினின்றும் தள்ளிநில்லுங்கள்.

2ம் ந. வாசி:-பெருந்தன்மைவாய்ந்த அந்தோனிக் கிடங்கொடுங்கள்.

அந்தோனி:—என்னை இவ்வளவு நெருக்காதீர்கள். தள்ளிநில்லுங்கள்.

நகரவாசிகள்:-தள்ளிநில்லுங்கள். இடம். இடம்.

அந்தோனி:—உங்களுக்குக் கண்ணீரிருப்பின் வடித்திடுங்களிப்போது. நீங்களெல்லோரும் இந்த மேலாடையை அறிவீர்கள். சீசர் முதன்முதல் அதை யணிந்தநாள் எனக்கு ஞாபகமிருக்கிறது: வேனிற்காலத்துப்பிற்பகலொன்றில் *"நேர்வி"யை வெற்றிகொண்ட அந்தநாள் அணிந்தான். பாருங்கள்! இந்த இடத்திற்றான் காஸியஸின் ஈட்டி ஊடுருவிப் பாய்ந்தது. அசூயைபிடித்த காஸ்கா செய்த பிளவைப் பாருங்கள். இங்குத்தான் சீசருக்கு ஆழ்ந்த

நேசனும் புரூட்டஸ் குத்தினன். அந்த நாசமான ஈட்டியைத் திரும்பப் பிடுங்கியபோது சீசரின் இரத்தம் வெளிக்கிளம்பிப் புரூட்டசும் இவ்வளவு கொடுமையாகக் குத்தினனோ இல்லையோ என்று கேட்பது போன்று எவ்வாறு அதன்பின்பற்றிச்சென்றதென்பதைக் கவனியுங்கள். ஏனெனில் புரூட்டஸ் சீசருக்கு உயிர்க் குயிரானவனென்று நீங்கள் அறிவீர்கள். ஓ தெய்வங்களே! எவ்வளவுஅன்புடன் சீசர் புரூட்டசை நேசித்தானென்று நீங்களே அறுதியிட்டுச் சொல்லுங்கள். இதுவே கொடு மையிலும் கடுங்கொடுமையாகும். ஏனெனில் உயரியசீசர் தனைக்குத் தும்பொழுது பார்க்குங்காலத்துத் துரோகியின் கொடுங்கையினும் கொடியதான செய்ந்நன்றி மறந்த தன்மை அவனை அறவே அலமரச்செய்தது. பின் னவ னிருதய முடைந் திடைந்தது. மேலாடையால் முகத்தை மூடிக்கொண்டு இரத்தவெள்ள மிது காறும் பெருகியோடிக் கொண்டிருந்த†"பாம்பி"யின் சிலைமருங்கில் அடியற்றமரம் போலப்புகழ்பெற்றசீசர் வீழ்ந் தொழிந்தான். அந்தோ! வீழ்ச்சிதா னென்ன வீழ்ச்சி; என் நாட்டவரே! நானும் நீங்களும் எல்லோரும் வீழ்ந்தோம். கொடிய துரோகம் நம் மேற் கொடிநாட்டிநின்றது. ஐயோ! இப்பொழுது நீங்கள் அழுகின்றீர்கள். இரக்கத்தின்மிகுதியால் நீங்கள் மனங் கசிந்துருகுவதை நான் அறிகின்றேன். இவை கருணை நிறைந்த கண்ணீர்த் துளிகள். நமது சீசரின் உடல் காயப் படுத்தப்பட்டிருப்பது கண்டும் நீங்கள் அழுதுகொண்டா இருப்பது? துரோகிகள் அவன்மேற்செய்த கொடுஞ்செயல் களை இங்கேபாருங்கள்!

1ம் ந. வாசி:—அந்தோ! பரிதாபகரமான காட்சி!

2ம் ந. வாசி:–ஐயோ பெருந்தன்மைவாய்ந்த சீசரே!

3ம் ந. வாசி:–ஐயோ. இது ஒரு துக்ககரமானநாள்!

4ம் ந. வாசி:–துரோகிகள்! கொடுந்துஷ்டர்கள்!

1ம் ந. வாசி:–இரத்தமயமான காட்சி!

2ம் ந. வாசி:–பழிக்குப்பழி—பழிக்குப்பழிவாங்குவோம். ஓடுங்கள்—தேடுங்கள்—கொளுத்துங்கள்—கொல்லுங்கள்—வெட்டுங்கள்—துரோகி யாரும் உயிரோடிருக்கலாகாது.

அந்தோனி:—நில்லுங்கள், என் நாட்டோர்களே!

1ம் ந. வாசி:–சத்தம். அந்தோனி பேசுவதைக் கேளுங்கள்.

அந்தோனி:—என் அரிய நண்பர்களே! பிரியநண்பர்களே! இவ்வளவு திடீரென்று நீங்கள் கலகபேரிகைமுழக்குதற்கு நான் தூண்டமாட்டேன். இந்தச்செயல்செய்தவர்கள் பெருந்தன்மைவாய்ந்தவர்கள். இவ்வாறு செய்வதற்கு அவரவர்களுக்கான சொந்தமான குறைகள் என்ன அவர்களுக்கிருந்தனவென்று யானறியேன். அவர்கள் புத்தியுடையவர்கள்; பெரிய மனுஷ்யர்கள். நிச்சயமாக உங்களுக்குச் சரியான உத்தரவாதம்சொல்லுவார்கள். நண்பர்களே! உங்கள் இருதயத்தை அபகரித்துக்கொண்டுபோக நான் வரவில்லை. புருட்டசைப்போல் நான் நாவன்மைபடைத்தவனில்லை. ஆனால் என் நண்பனை நேசித்து உள்ளதை உள்ளபடி யுரைக்கும் கள்ளமறியா உள்ளநெறியேன் என்று நீங்களெல்லோரும் என்னை அறிவீர்கள். இதனை இவ்விடம் பஹிரங்கமாய் எனக்குப் பேச அனுமதிகொடுத்தவர்களும் நன்கறிவார்கள். மனிதர் இரத்தத்தைக் கொதிக்கச்செய்து ஆவேசங்கொண்டெழச்செய்தற்கவசியமான, விவேகம், சொல், சாமார்த்தியம், அபிநயம், நாவன்மை, வசப்படப் பேசல் என்ற இவற்றுள் ஒன்றேனும் என்னிடமில்லை. ஏதோ தெரிந்ததைச் சொல்லிக்கொண்டேபோகின்றேன். உங்களுக்குத்தெரிந்ததையே நானும் சொல்லுகின்றேன்,

அன்டனன் சீசர் காயங்களைக் காட்டுகின்றேன். வாயில்லாக் காயங்கள் உங்கள் மனதைக் கரையச்செய்யும். நான் புரூட்டசாயும் புரூட்டஸ் அந்தோனியாயுமிருந்தால் அப் பொழு தென்னவாகும்? அந்தோனி என்பான் ஒருவன் உங்கள் மனதை எழுப்பிச் சீசரின் ஒவ்வொரு காயத்திலும் நாக்கைச் சிருஷ்டிக்க அந்நாக்குகள் உரோமாபுரியிலுள்ள ஒ வ் வொ ரு கருங்கல்லையுமே எழுந்து போர்முழக்கம் முழங்குமாறு செய்யும்.

நகரவாசிகள்:-நாங்கள் போர்புரிகின்றோம்.

1ம் ந. வாசி:-புரூட்டசின்வீட்டைக் கொளுத்துகிறோம்.

3ம் ந. வாசி:-அப்படியாயின் ஓடுங்கள்; அத்துரோகிகளைத் தேடுங்கள்.

அந்தோனி:—கேளுங்கள். நாட்டோர்களே! நான்பேசுவதை இன்னுஞ் சிறிது கேளுங்கள்.

நகரவாசிகள்:-சத்தம். அந்தோனி சொல்வதைக் கேளுங்கள்—பெருமை வாய்ந்த அந்தோனி!

அந்தோனி:—என்ன! என்நண்பர்களே! நீங்கள் செய்யப்போவது என்ன வென்றறியாமலே செய்யப்போகிறீர்களே. உங்களின் இத் தகைய அன்புக்குச் சீசர் எவ்வாறு பாத்திரமாயினன்? நீங்க ளறிந்திருக்கமாட்டீர்கள். நான் சொல்லவேண்டும். நான் சொன்ன உயிலை நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

நகரவாசிகள்:-ஆமாம். நிரம்ப வாஸ்தவம். நாங்களிருந்து அந்தஉயிலைக் கேட்கட்டும்.

அந்தோனி:—இதோ இருக்கிறது அந்த உயில்—சீசரின்முத்திரையிடப் பட்டஉயில். 'உரோமாபுரியிலுள்ள ஒவ்வொருவனுக்கும் அவன் 75 பொன்நாணயங்கள் (Drachmas) கொடுத் திருக்கின்றான்.

2ம் ந. வாசி:-பெரியமனதுவாய்ந்த சீசர் இவன்! பழிக்குப்பழிவாங்கு வோம்.

3ம் ந. வாசி:—அரசகுணம்வாய்ந்த சீசர் இவன்!

அந்தோனி:—அமைதியுடன் கேளுங்கள்.

நகரவாசிகள்:-சத்தமிடாதீர்கள்.

அந்தோனி:—அது மட்டுமல்ல; இன்னும் 'தைபர்'நதிக் கிப்பக்கமுள்ள தன் சாலைகளும் புதிதாய்ப்பதித்திட்ட சோலைகளும் கொடி படர்ந்த சொந்தப் பந்தல்களும் உங்களுக்குத் தந்திருக்கின்றான். இன்னும் நீங்கள் உல்லாசமாய் உலாவிச் சல்லாபித்து இன்பநுகர்ந்திட நந்தவனங்களும் உங்களுக்கும் உங்கள் சந்ததியார்க்கும் பாம்பரையாய் அனுபவிக்கத் தந்திருக்கின்றான். இத்தகைய சீசர் ஒருவனை இனி எத்தினம் நாம் அடையமுடியும்?

1ம் ந. வாசி:—ஒருகாலுமில்லை; ஒருகாலுமில்லை. வாருங்கள் வாருங்கள். அவன் (சீசருடைய) உடலைப் பரிசுத்தமான இடத்தில் தகனம் செய்வோம். அக்கொள்ளிக்கட்டைகளைக் கொண்டு துரோகிகள்வீட்டைக் கொளுத்துவோம். தூக்குங்கள் உடலை.

2ம் ந. வாசி:—போங்கள். தீயைக்கொண்டுவாருங்கள்.

3ம் ந. வாசி:—பலகைகளை இழுத்தெறியுங்கள்.

4ம் ந. வாசி:—பலகைகள், பலகணிகள், எதுவாயினும்சரி, இழுத்தெறியுங்கள்.

(எல்லோரும் போகின்றார்கள்).

அந்தோனி:—சரி, நன்றாக வேலைசெய்க; பேய்க்குறும்பே! உன்னைக் கட்டவிழ்த்து வெளியில் விட்டிருக்கிறது. உனக்கு எது இஷ்டமானபாதையோ அவ்வழி செல்வாயாக.

கிருஷ்ணசாமிப்பிள்ளை (B.A., Hons.)

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உச-ம் தொகுதியின் சஅஅ-ம் பக்கத்தொடர்ச்சி.]

## குகப்படலம்.

குகன் பரதனைச் சந்தித்ததும் அப்போது நிகழ்ந்ததும் கூறுவது.

[இராமன் காடுசென்றது கருதி ஏங்கி இன்னலெய்தி இளைத்திருந்த பரதனைப் பார்த்தோர் பரிதாபப்பட்டாரென்பானேன், அவனைக் கண்ட மாக்களும் மரங்களும் இரங்குமென்னும்படி அவன் துன்பமே ஒருரு வெடுத்தாற்போலும் தோற்றமுடையானுய், வழிநடந்து கங்கைக்கரையை அடைந்தான். அவனைத் தொடர்ந்து படர்ந்த சேனை கங்கையில் இறங்கி நீருந்தியபோது, அந்த ஆறு கடலுக்குச்செல்லப் போதியநீரில் லாதபடி குறைந்ததென்னும்படி சேனைப்பெருக்கம் இருந்தது.

அப்படிப்பட்ட பெருஞ்சேனையைக் கண்ட குகன், அது இராமனைத் துரத்தத்தொடர்ந்ததென்றுகருதிக் கோபங்கொண்டு, போர்வில்போலப் புருவவில் வளையச் செந்நெருப்பெனக் கண்கள் சிவக்கப் புயற்காற்றுப் போல நாசி நெடுமூச்சு வீச, வாய் இறுக மடித்துக் கடிக்கப் போர் கிடைத்ததென்று புயங்கள் பூரிக்க, அப்படையை இகழ்ந்த குறிப்புத் தோன்றக் கோபநகை நகைத்துக் கூற்றுவன் பல உருக்கொண்டாற் போலவும் பூமியிலுள்ள புலிகளெல்லாம் ஓரிடத்தே திரண்டாற்போலவு முள்ள தன் படைஞரைநோக்கி, "அதோ! தோன்றுகின்ற சேனை எலிக் கூட்டம், நான் பாம்பு" என்று கூறித் தன்படை புடைசூழப் புறப் பட்டுக் கங்கையின் தென்கரைக்கண் வந்தான். வந்தவன் அந்தப் படைவீரரைப் பார்த்து "யான் அந்தச்சேனையைத் தொலைக்கத் துணிந் தேன், தோணியோட்டுந்தொழிலை நீங்கள் நிறுத்தி, அவர்கள் எனக்குத் தப்பி இங்கேவந்தால், கொல்லுங்கள்" என்று பின்னுங் கூறுவானுய் "என் ஆருயிர்நாயகன் இராமன் ஆளும் அரசை வஞ்சனையாற் கவர்ந்த மன்னன் வந்தான், அவனைக் கொல்ல அவாவி என் அம்புகள் துடிக்

கின்றன, விட்டுவிட்டால், பாயாமற் பழுதுபடா, அவனும் அவன் சேனையும் என்கையைவிட்டுத் தப்பிப்போய்விட்டால், "சீ! குகன் ஒரு நாய்!" என்று உலகம் என்னை இகழும்."]

327. " ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை யென்றவர் சொல்லிய சொல்ஒரு சொல்லன்றோ ?
'ஏழமை வேடன் இறந்திலன்' என்றெனை ஏசாரோ?"

இ-ள். "(என் அநுமதியின்றி) இவர்கள் (இந்த) ஆற்றைக்கடந்து போய்விடுவார்களோ? (அது ஒரு நாளும் ஆகாது; மற்றவர்கள் பார்த்துப் பயப்படும் பேருருவுடைய) யானைப்படையைப்பார்த்து (ப் பயந்து) ஒதுங்கிப்போகும் வில்லாளியோ யான்? (இல்லையென்று சொல்லவும் வேண்டுமோ; மகாராசனான) அவர் (மிக ஏழையான என்னைத்) தோழன் என்று (மனத்துட்கொண்டதேயன்றி, அருமையாக வாய்விட்டுச்) சொல்லிய (அன்பான) சொல் (யான் உயிரையுங்கொடுத்துப் போற்றுதற் குரிய) ஒப்பற்றசொல்லன்றோ? (அதனை யொத்த அருமையான சொல் ஒன்றுமில்லை; யான் பாதனையும் படையையும் தடுக்காமல் விடுப்பே னானால், இந்த) ஏழைவேடன் (தடுக்கமுடியவில்லையானாலும் அந்த முயற்சியைச் செய்து) செத்தா(வதுபோனா)னில்லையே! என்று (உலகத் தார்) என்னை யிகழாரோ? (இகழவே செய்வார்.)"

விலங்குதல்-விலகுதல். வில்ஆள்-வில்வீரன். நட்பு, பகை, உறவு என்பவை முறையே நண்பன் பகைவன் உறவினனை உணர்த்தல்போலத் தோழமை தோழனை உணர்த்தியது. ஏழைமை-எளிமை; அறியாமை. 'ஆழநெடும்புனல்கங்கை' யென்றும் பாடம்.

328. " முன்னவ னென்று நினைந்திலன்; மொய்புலி அன்னான் ஓர்
பின்னவ னின்றன னென்றிலன்; அன்னவை பேசானேல்,
என்இவன் என்னை இகழ்ந்ததிவ் வெல்லை கடந்தன்றோ,
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடும்சரம் வாயாவோ?"

இ-ள். "(இந்தப் பாதன், தான் துரத்தப் புறப்பட்ட இராமன், தனக்குத்) தமையனென்பதைக் கருதினானில்லை; (அப்படிக் கருதவில்லை

யாயினும், தன்னைப்போன்ற மற்றும்) ஒரு தம்பி வலிமையுடைய புலியை நிகர்பவன் (அந்தத் தமயனுக்குத் துணையாக) நிற்கின்றானென்பதையும் நினைந்தானில்லை; அவ்விரண்டையும் எண்ணாயின் (ஆதுக; அவர்களுக்குத் துணையாக உள்ள) என்னை (இவன் ஒருபொருளாகக் கருதாமல்) இகழ்ந்தது எப்படி? (எனது காவலுக்குட்பட்ட) இந்த எல்லையைத் தாண்டியன்றோ (என்னையிகழலாம்)? ஒருகால் என் அம்பு தன்னைத் தையாதென்றும் அதனால் இவ் வெல்லையை எளிதாகக் கடக்கலாமென்றும் எண்ணினான்போலும். ஓகோ! வேடர்கள் விடும் அம்பு வேந்தர்கள் நெஞ்சில் (பாயாவென்றெண்ணினனோ? அவை பாயாமல்) தப்புமோ? (தப்பா.)"

மொய்புலி-நெருங்கிய புலி; இராமன் ஒருபுலியாக, அவனுக்கு நெருங்கிய துணையானபுலி. அன்னவை-அவைகள்-அவ் விருவர் (வீரத்) தன்மைகள். பேசல்—(மனத்துள்ளே) பேசல்—கருதுதல். பேசலென்னும் வாயின்செயல் மனத்தின்செயலாகக் கூறப்பட்டது. "பேசுதலென்றது கருதுதலை; இதனைச் 'செவிகைப்ப' என்று (௩அகூம் குறளில்) கூறியதற்குப் பரிமேலழகர் கூறியதனாற் காண்க." எவன் (—எப்படி) என்பது இடையிற்குறைந்து என் என நின்றது. எவன்-எப்படி. "எவன்பல மொழிகுவம்" கலி. ௫. (சங்க அகராதி). வாயாவோ—தப்புமோ; (வாய்த்த-தப்பாத. சிந்தாமணி). 'வாய்ப்ப',சேர என்றபொருளிற் பரிபாடலில் வருதல்கொண்டு, வாயாவோ என்பதற்குச் சேராவோ என்றும் பொருள் கூறலாம்.

329. "அருந்தவம் என்துணை ஆள, இவன்புவி ஆள்வானோ?
மருந்தெனின், அன்றுயிர்; வண்புகழ் கொண்டுபின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று: கழிக்குவென் என்கடன் இன்றோடே."

இ-ள். "எனக்குத்துணைவனான இராமன் அருந்தவம் செய்யாநிற்க, இவன் அரசுசெய்வானோ? (இவனோடு போர்புரிந்து இவனை அரசுசெய்யவிடேன். போர்புரிதலில் உயிர்போய்விடலாமே,) உயிர் மருந்து (அன்றோ) என்றால், (அது மற்றவர்களுக்கு மருந்து, எனக்கு மருந்து) அன்று: (போர்புரிந்து பூதவுடம்பைக்கொடுத்து அதற்கு

மாருகப்) புகழ் (உடம்பை) பெற்று (அதன்) பின்பு சாகேனே? (பின்புதான் சாவேன், முன்பு சாகேன்). என்னொடு பொருந்தியஉறவை விரும்பியவரோடு (கூடப்) போகாமல், (இங்கே யான் தங்கி) இருந்தது நன்மை (ஆயிற்று. அவரைத் துரத்தப்புகுந்த பாதனுடன் போர்புரிந்து அவனை வெல்லவாவது, வெல்லமுடியாவிட்டால், உயிரைவிடவாவது செய்து, அவர் என்னைத் தோழனென்று கொண்டதனுல் அவருக்கு நான் பட்டுள்ள) என் கடனை இன்றே (செலுத்திக்) கழித்துவிடுவேன்".

துணை ஆகுபெயராய்த் துணையானவனை உணர்த்தியது. கேண்மை- உறவு (ஐங்குறுநூறு). கடன்கழித்தல் - செயற்பாலதாகியமுறையைச் செய்து கழித்தல் (சங்கஅகராதி). 'உயர்வண்புகழ்கொண்டுயிர்மாயேனே' என்பதும் பாடம்.

["மன்னாயுள்ளார்க்கு, மற்றையமாந்தருக்குப்போலன்றி, பாவ புண்ணியம் பழி புகழ் பகை நட்பு என்ற பேதங்கள் இல்லைப்போலும். இருந்தால், பாதன் இராமன்திறத்தில் இவ்வாறு செய்வானே! அவன் செய்யக்கருதியது, அவனும் அவன் சேனையும் என்கைக் ககப்படாமல் தப்பி, உயிர்கொண்டு கங்கையைக் கடந்தாலன்றோ முடியும். தன்னை நாட்டினை ஆளவைத்த தமயனைக் காட்டினும் வாழவொட்டாமல் துரத்த வந்தவனையும் படையையும் தொலைத்து நாட்டை மீட்டுக்கொடுத்தது வேட்டுவர்கூட்டமென்னும் மேன்மையை மேவுவேமாக" என்று வேடரை நோக்கிக் கூறிநின்றான்.

அப்போது, சுமந்திரன், பாதனைநோக்கிக் "கங்கையின் கரைக ளிரண்டுக்கும் காவலன், எண்ணிறந்ததோணிகளுக்கு எசமானன், மிக்க வில்வீரன், வேடருக்கு வேந்தன், இராமனுக்கு இட்டன், அளவற்ற அன்புடையான் ஆகிய குகன் நின்னைக் காணுங்கருத்தினனாய் நிற்கின் றான்" என்றான். எனவே, பாதன், குகன்பால் அன்புகூர்ந்து "இராம னுக்குத் தோழனானுல், அவன் என்னைக் காணவருமுன் அவனை நானே போய்க் காண்பேன்" என்று எழுந்து, அன்பு முன்செல்லத் தம்பி பின்செல்லச் சென்று, கங்கைக் கரையை அடைந்துநின்றான். நின்றவ னைக் குகன் நோக்கி அவன் தேகநிலைமையைக் கண்டு திடுக்கிட்டான்.]

330. வற்கலையின் உடையானை, மாசடைந்த மெய்யானை
நற்கலையில் மதிஎன்ன நகைஇழந்த முகத்தானைக்

கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்;
விற்கையினின் றிடைவீழ, விம்முற்று நின்றொழிந்தான்.

இ - ள். மாவுரி (ஆடை) உடையானும் அழுக்கடைந்த உடலினனும் (பதினாறு கலைகளும் இல்லாத (பிரகாசமின்றி வடிவம்மாத்திரம் காணப்படுகின்ற) சந்திரன்போல (மகிழ்ச்சியற்று) ஒளியிழந்த முகத்தானும் (உணர்ச்சியில்லாத) கல்லும் கனியும்படி கனியும் துன்பத்தானுமான பரதனைக் குகன் பார்த்தான்: (பார்த்தமாத்திரையே, அவனறியாமலே அவனுடைய) வில்லுக் கையினின்று (நழுவி நிலத்தில்) விழ, விம்மி (மெய்ம்மறந்து) நின்று (செயல்) ஒழிந்தான்.

வற்கலை-மாவுரி. இல்-இல்லாத. நகையென்பது இங்கே அதன் மகிழ்ச்சி ஒளியென்னும் இருபொருள்களையும் ஒருங்கே உணர்த்தி நின்றது காண்க. இடை, நிலத்திடையென்றும், ஒழிந்தான், செயலொழிந்தானென்றும் பொருள்கொள்ளும்படிநின்றன.

இதன்முன் பரதன் தேகநிலைமையைக்கண்டு குகன் திடுக்கிட்டானென்ற கவி, அவன் திடுகிட்ட காரணத்தை விவரிப்பாராய், அத் தேகநிலைமையை இந்தப்பாட்டில் வருணித்திருக்கும் முறை, மிக்க இனிமை பயக்கின்றது. அவர், சிறிது தூரத்தே நின்ற பரதனைக் குகன் கண்டபோது, அவன் எதிர்பார்த்திராத மரவுரித்தோற்றம், அவன்மனத்தைத் தாக்கி அவன்கவனத்தை ஈர்த்தது; அடுத்து, அதனை உடுத்திருந்த உடம்பு கட்புலனாகி அது மாசுபடிந்து அம் மாசு நீக்கப்படாதிருந்தது அவன்கவனத்தைக் கவர்ந்தது; அவன் அவ் விபரீதங்களுக்குக் காரணம் யாது எனப் பரதன்முகத்தை நோக்க, அது பொலிவிழந்ததாய் ஆழ்ந்த அகன்ற அளவுகடந்த துன்பத்தைக் காட்டியது; அத் துன்பம், சேதனரான மக்கள்மனத்து மிக்க இரக்கம்விளைக்கும்படியிருந்ததென்பானேன், அசேதனமான கல்லும் கரைந்துருகும்படியிருந்தது என விரித்துப் பொருள்கொள்ளும்படி பரதனது தேகத்தோற்றவருணனை செய்திருப்பது சிந்தித்துக் களிகூரத்தக்கது.

கோபங்கொண்டிருந்த குகன் மனநிலையை மாவுரி உடை மாறச் செய்ததும், அம்மாறுதலாலுண்டாகிய புதிய மனஉணர்ச்சியை முதற்கண் மாசடைந்த மேனியும் அடுத்து நகையிழந்தமுகமும் இறுதியாக

அம் முகம் காட்டின கல்லையும் கனிவிக்கும் கழிபெருந் துன்பமும் படிப்படியாக உயர்த்தி உச்சநிலையுறச் செய்ததும், அந் நிலையை அடையவே குகன் இறுகப்பிடித்திருந்த வில் அவன் மெய்சோர்ந்து கைசோர அவனறியாமலே நெகிழ்ந்து நழுவி நிலத்தில்விழுந்ததும், இவ்வாறுகக் குகன் கொண்டிருந்த கருத்துக்கு முற்றும் மாறுய் அவன் எதிர்பார்த்திராத காட்சி அவனை மெய்ம்மறந்து நினைவிழந்து செயலொழிந்து தம்பித்துநிற்கச்செய்ததும் நம் கண்ணெதிரே கண்டாற் போலக் கூறியிருக்கும் அதிசய கவிசாதுரியம் நம் அகத்தைவிட்டகலாத ஆனந்தம்விளைப்பதாயிருக்கின்றது.

331. "நம்பியும்என் நாயகனை ஒக்கின்றுன்; அயல்நின்றுன்
தம்பியையும் ஒக்கின்றுன்; தவவேடம் தலைநின்றுன்;
துன்பம்ஒரு முடிவில்லை; திசைநோக்கித் தொழுகின்றுன்:
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பாரோ பிழைப்"பென்றுன்.

இ-ள். (நினைவுநீங்கிநின்ற குகன், நினைவு மீளப்பெற்றபோது, தன்பரிவாரத்தாரை நோக்கி,) "பரதன், என் நாயகன் இராமனை ஒத்திருக்கின்றுன்; பக்கத்தில் நிற்கின்ற சத்துருக்கன், இராமன் தம்பி இலக்குமணனை ஒத்திருக்கின்றுன்; பரதன் தவவேடம்மேற்கொண்டிருக்கின்றுன்; அவன் துன்பத்துக்கு எல்லையில்லை; (இராமன் சென்ற) திக்குநோக்கித் தெண்டனிடுகின்றுன்: (எம்பிரான் இராமசுவாமிக்குப் பரமபத்தனுன பரதனை விரோதியென்று தவறுக எண்ணி அபராதம் செய்தேன்:) எம்பிரான்தம்பிமார் பிழைபாடு புரிவாரோ!" என்றுன்.

நம்பி-புருடோத்தமன்-ஆடவரிற்சிறந்தோன். நாயகன்-எசமானன். 'அயல் நின்றுன் தம்பியையும்' என்பதில் உம்மையைப் பிரித்துக் கூட்டி 'அயல் நின்றுனும் தம்பியை' எனக் கொள்க. உம்மைகளில் முந்தியது எதிரதுதழீஇயது; பிந்தியது இறந்ததுதழீஇயது. தலைநிற்றல்-மேற்கொள்ளல். மந்திரப்படலம் சுகூ-ம் பாட்டில் 'தலைநின்றுன்' மேற்கொண்டானென்றபொருள்பட வருதல் காண்க. இழைத்தல்-செய்தல். 'நம்பியிவன்' 'பிழையென்னு' என்பவையும் பாடங்கள்.

(தொடரும்.)

வெ. ப சுப்பிரமணியமுதலியார்.

# ஸ்வப்ன வாசவ தத்தம்.

[௨௬-ம் தொகுதியின் ௬௯௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

## ஐந்தாம அங்கம்.

(பத்மினிகைவருதல்)

பத்மினிகை:—மதுகரிகா! மதுகரிகா!! விரைய இங்கேவா!

மதுகரிகை:—தோழி! இதோவந்துவிட்டேன்; என்னசெய்யவேண்டும்?

பத்மினி:– என்ன! உனக்குத் தெரியாதா? இளவரசி பத்மாவதி தலைவலியால் வருந்துகிறாள்.

மதுகரி:— ஆ! இதென்ன கஷ்டம்.

பத்மினி:– ஸகி! ஓடிச்சென்று ஆவந்திகையம்மாளை அழை!. இளவரசி தலைவலியால்வருந்துகிறாள் என்று மாத்திரம் சொல்; தானே வந்துவிடுவாள்.

மதுகரி:— தோழி! அவள்வந்து என்னசெய்யப்போகிறாள்?

பத்மினி:– அவள் இனிய கதைகள்சொல்லி இளவரசியின் தலைவலியைப் போக்குவாள்.

மதுகரி:— ஆமாம்; அப்படித்தான். இளவரசிக்கு எங்கே படுக்கையிட்டிருக்கிறது?

பத்மினி:—சமுத்திரக்ருகத்தில்தான் படுக்கைவிரித்திருக்கிறது; நீ அவ்விடம்போ! நான் அரசரிடம் சொல்வதற்கு வஸந்தகரைத் தேடுகிறேன்.

மதுகரி:— அப்படியாகட்டும். (போதல்)

பத்மினி:– இப்பொழுது வஸந்தகரை எங்கே பார்க்கலாம்?

(விதூஷகன் வருதல்)

விதூ:— இந்த இன்பமான மங்கலநன்னாளிலே தேவியைப் பிரிந்து நெஞ்சமைந்து வியாகுலப்படும் வத்ஸராஜருக்குப் பத்மாவதியின் திருமணத்தால் காமாக்கினி மிகுந்து வளருகிறது.

(பத்மினிகையைப்பார்த்து) ஆ! பத்மினிகையா! பத்மினிகே! என்னசெய்கிறாய்?

பத்மினி:- ஐயா! வஸந்தகரே! ஏன் உமக்குத்தெரியாதா! இளவரசி பத்மாவதி தலைவலியால் வருந்துகிறாளென்று?

விதூ:— உண்மையாக எனக்குத் தெரியாதம்மா.

பத்மினி:- ஆனால் நீர் இதை அரசரிடம் தெரிவிக்கவேண்டும். நானும் அதற்குள் தலைப்பூச்சு விரைவில் தயாரிக்கிறேன்.

விதூ:— பத்மாவதிக்கு எங்கே படுக்கையிட்டிருக்கிறது?

பத்மினி:- சமுத்திரக்ருகத்திற் படுக்கைவிரித்திருக்கிறது.

விதூ:— ஆனால் நீ போ! நானும் அரசரிடம்தெரிவிக்கிறேன். (இருவரும் போதல்). [உதயனன் வருதல்]

உதயனன்:-இப்பொழுது காலக்கிரமத்தில் மீண்டும் குடும்பச்சுமையை மேற்கொண்ட நான் இலாவாணகத்தீயில் கொடும்பனியால் அழிந்த தாமரைபோல் தன் மெல்லியவுடலை நீறாக்கிய அவந்திமன்னனது செல்வப்புதல்வியை நினைக்கிறேன்.

விதூ:— (பிரவேசித்து) அரசே! சீக்கிரம்வரவேண்டும்; சீக்கிரம்வரவேண்டும்.

உதயனன்:-ஏன்?

விதூ:— பத்மாவதிதேவி தலைவலியால்வருந்துகிறாள்.

உதயனன்:-யார் இப்படிச்சொன்னது?

விதூ:— பத்மினிகைசொன்னாள்.

உதயனன்:-ஆ! கஷ்டம். அழகும் செல்வமும் குணமும் வாய்ந்த ஒரு காதலியையடைந்ததில் என் துயரம் சற்று ஆறியதுபோலிருந்தது. ஆனால் முன்பட்ட துன்பம் என் நெஞ்சை நல்லவண்ணம் சுட்டுவிட்டது. ஒருமுறை துக்கம் இன்னதென்றறிந்த நான் பத்மாவதிக்கும் அதேகதிவருமோவென்று நினைக்கிறேன். சரி! பத்மாவதி எந்தஇடத்தில் இருக்கிறாள்?

விதூ:— சமுத்திரக்ருகத்திற் படுக்கைவிரித்திருக்கிறது.

உதயனன்:—ஆனால் அங்கே அழைத்துச்செல்.

விதூ:— அரசே! வரவேண்டும் வாவேண்டும். (இருவரும் நடத்தல்).

விதூ:— சமுத்திரக்ருகம் இதோ இருக்கிறது; அரசே! உள்ளே போக வேண்டும்.

உதயனன்:—நீ முன்னே போ.

விதூ:— ஆகட்டும் அரசே! (உள்ளே சென்று) ஐயோ! நில்லும்; அரசே! நில்லும்.

உதயன்ன்:—ஏன்?

விதூ:— இதோ விளக்குவெளிச்சத்தில் தரையில் ஒன்று நெளிந்து செல்வது தெரிகிறது. அது ஒரு பாம்பு.

உதயனன்:—(உள்ளேசென்று பார்த்துச் சிரித்து) இது இந்த மூட னுக்குப் பாம்பென்று தோன்றுகிறது. முட்டாள்! தோரண வாசலில் அசைந்து தொங்கிய மாலை தரையில் விழுந்து நீண்டுகிடப்பதைக் கண்டு திகைக்கிறாய்! அது மாலைக்காலத் தில்வீசும் இளங்காற்றால் அசைவுற்றுப் பாம்பின்செய் கையைச் சற்றுச் செய்கிறது.

விதூ:— (உற்றுநோக்கி) அரசே! தாங்கள் சொல்வது சரிதான். இது பாம்பல்ல. (உள்ளே சென்றுபார்த்து) பத்மாவதிதேவி இங்கே வந்துவிட்டுப்போயிருக்கவேண்டும்.

உதயனன்:—நண்ப! அவள் இங்கே வந்திருக்கமுடியாது.

விதூ:— உமக்கெப்படித்தெரிந்தது?

உதயனன்:—இதி லென்ன தெரிவதற்குள்ளது? இதோபார்! படுக்கை தடம்விழாமல் விரித்தபடியே ச ம ம ா யி ரு க் கி ற து; போர்வை குலையவில்லை; தலைவலிமருந்துகளாற் கறைபடாது தலையணை சுத்தமாயிருக்கிறது; நோயாளியை வினோதிப் பதற்குக் கண்ணுக்கினிய அலங்காரம் ஒன்றும் காணப்பட வில்லை. நோயாற் படுக்கையிற் கிடந்து பிறகு ஒருவரும் தாமாகவே சீக்கிரம் அதைவிட்டுப் போவதில்லை.

விதூ:— ஆனால் அரசே! சற்றுநேரம் இந்தப்படுக்கையிலிருந்து பத்மா வதியரசியின்வரவை எதிர்பார்க்கவேண்டும்..

உதயனன்:—ஆகட்டும். (உட்கார்ந்து) நண்ப! எனக்குத் தூக்கம் வருகிறது. ஒரு கதைசொல்.

விதூ:— நான் சொல்லுகிறேன். நீர் "உம் உம்" என்று கேளும்.

உதயனன்:—ஆகட்டும்.

விதூ:— உச்சயினி என்றொரு நகரம். அங்கே வெகு ரமணீயமான உதகைத்தடங்கள் உள்ளன.

உதயனன்:—என்ன! உச்சயினியா?

விதூ:— இந்தக் கதை பிடிக்காவிட்டால் வேறொன்று சொல்லுகிறேன்.

உதயனன்:—நண்ப! இக்கதை பிடிக்கவில்லையென்றல்ல. ஆனால் அது அவந்திமன்னன்புதல்வி என்னொடு புறப்படும்போது தன்னூற்றாரை நினைத்ததும் அன்பினாற் கண்களிற்பொங்கின கண்ணீர்ப்பெருக்கினை என்மார்பிற்சொரிந்ததை நினைப்பூட்டுகிறது. மேலும், வீணை கற்றுக்கொள்ளுங்கால் அவள் பலதடவை என்னையேபார்த்துத் தடவுகோலை நழுவவிட்டுக் கையை ஆகாயத்தில் மீட்டினதும் நினைவுக்குவருகிறது.

விதூ:— ஆனால் வேறொன்று சொல்லுகிறேன். பிரம்மதத்தம் என்றொருநகரம்உண்டு; அங்கே காம்பிலியன் என்றொரு அரசன் இருந்தான்.

உதயனன்:—எப்படி எப்படி?

விதூ:— பிரம்மதத்தம் என்றொருநகரம் உண்டு. அங்கே காம்பிலியன் என்றொரு அரசன் இருந்தான்.

உதயனன்:—அடா மூடா! பிரமதத்தன் என்றொரு அரசன்; காம்பிலியம் என்றொருநகரம் என்று சொல்.

விதூ:— என்ன! பிரம்மதத்தன் என்றொரு அரசன், காம்பிலியம் என்றொரு நகரம் என்று?

உதயனன்:—ஆமாம்; அப்படித்தான்.

விதூ:— ஆனால், அரசே! சற்றுப்பொறும். நான் அதை மனப்பாடம் செய்துகொள்ளுகிறேன் "பிரமதத்தன்என் றொரு அரசன், காம்பிலியம் என்றொரு நகரம்" (பலதடவை அதைச் சொல்லுதல்) அரசே! இப்பொழுது சொல்லுகிறேன்

கேளும். ஆ! அரசர் தூங்கிவிட்டார். இது மிகவும் குளிர்ந்தவேளை. என் போர்வையை எடுத்துக்கொண்டு வருகிறேன். (போதல்)

(சேடியுடன் ஆவந்திகை வருதல்)

சேடி:— அம்மா! வரவேண்டும்; வரவேண்டும்; இளவாசி தலைவலியால் மிகவும் வருந்துகிறாள்.

ஆவந்தி:—ஆ! கஷ்டம்; பத்மாவதிக்கு எங்கேபடுக்கைவிரித்திருக்கிறது?

சேடி:— சமுத்ரக்ருகத்திற் படுக்கை விரித்திருக்கிறது.

ஆவந்தி:—ஆனால் நீ முன்னே செல் (இருவரும் நடத்தல்).

சேடி:— இது சமுத்திரக்ருகம்; உள்ளேபோங்கள். நான் தலைப்பூச்சுத் தயாரித்துவருகிறேன். (போதல்)

ஆவந்தி:—ஆ! தெய்வம் என்மேல் கருணையற்றதே! ஏனெனின் விரகத்தால் துயரடையும் என்காதலருக்கு ஆறுதல் செய்துவந்த இந்தப் பத்மாவதியும் சௌக்கியமற்றவளானாள். நான் உள்ளே போகிறேன். (உள்ளே சென்று பார்த்து) ஆ! வேலைக்காரர்களுக்கு என்ன அஜாக்கிரதை! சௌக்கியமில்லாமலிருக்கும் பத்மாவதிக்கு ஒரு விளக்கைமட்டும் துணையாக வைத்துவிட்டுப் போய்விட்டார்களே! இதோ பத்மாவதி படுத்துறங்குகிறாள். நான் உட்காருகிறேன். படுக்கையிலிருந்து விலகியுட்கார்ந்தால் எனது அன்பு அற்பமாகத் தோன்றும். அதனால் இந்தப்படுக்கையிலேயே உட்காருகிறேன். (உட்கார்ந்து) என்ன ஆச்சரியம், இன்று இவளருகில் இருக்கும்பொழுது என்னுள்ளம் சந்தோஷத்தாற் பூரிக்கிறது. நல்லகாலம் நேராகவும் சுகமாகவும் மூச்சுவிடுகிறாள். வியாதி அனேகமாகக் குணப்பட்டிருக்கவேண்டும்; படுக்கையின் ஓர் ஓரமாகப் படுத்திருப்பதால் என்னைத் தழுவிக்கொள்ள அழைப்பதுபோல் தோன்றுகிறது. நானும் படுத்துக்கொள்ளுகிறேன். (படுத்துக்கொள்ளுதல்.)

உதயனன்:—(கனவிற் புலம்புதல்—) ஏ! வாஸவதத்தே?

வாஸவ:—(திடீரென்றெழுந்து) ஆ! என் காதலர், பத்மாவதியல்ல. என்ன! யாரேனும் பார்த்துவிட்டார்களா? பார்த்துவிட்டால் யௌகந்தராயணர் எடுத்த பெரும்பாரமாகிய பிரதிக்ஞை வீணாய்விட்டதே!

உதயனன்:—ஆ! அவந்திராஜன்புதல்வி?

வாஸவ:—என் அன்பர் கனவிற் புலம்புகிறார்; நல்லகாலம். இவ்விடத்தில் ஒருவருமே இல்லை. சற்றிருந்துகொள்ளுகிறேன். என் கண்ணும் உள்ளமும் களிப்புறட்டும்.

உதயனன்:—ஆ! என் அன்பே? ஆ! என் அன்பார்ந்த சிஷ்யே? எனக்கு மறுமொழி சொல்!

வாஸவ:—சொல்லுகிறேன்; நாதா! சொல்லுகிறேன்.

உதயனன்:— ஏன் கோபித்துக்கொண்டிருக்கிறாய்?

வாஸவ:—இல்லை; இல்லை; துக்கத்துடன் இருக்கிறேன்.

உதயனன்:—கோபமில்லையானால், ஏன் அலங்கரித்துக்கொள்ளவில்லை?

வாஸவ:—இதிலும் மேலாக என்னவேண்டும்?

உதயனன்:—விரசிகையை நினைக்கிறாயா?

வாஸவ:—(கோபத்துடன்) போம்; இங்கேயும் விரசிகையா!

உதயனன்:—ஆனால் விரசிகை காரணமாக உன்மன்னிப்பை வேண்டுகிறேன்.

(இருகைகளையும் நீட்டுதல்).

வாஸவ:—நெடுநேரம் இருந்துவிட்டேன்; யாராவது என்னைக் காணக்கூடும். நான் போய்விடுகிறேன். இல்லை; படுக்கையிலிருந்து தொங்குகிற என் காதலர்கைகளைப் படுக்கைமேல் எடுத்துவைத்துவிட்டுப் போகிறேன். (அப்படியேசெய்துவிட்டுப் போதல்)

உதயனன்:—(சரேலென்று எழுந்து) ஏ! வாஸவதத்தே! நில்; நில்; (தலையில் அடிபட) ஹா! கஷ்டம்! பரபரப்புடன் நான் வெளியே ஓடிவந்ததில் வாசற்படி என்னை இடித்துவிட்டது. ஆனதால் இது உண்மைதானோ அல்லது தோற்றந்தானோஎன்று தெளிவாய் அறியமுடியவில்லை.

விதூ:— (பிரவேசித்து) ஆ அரசே! தூங்கி விழித்தீரோ?

உதயனன்:—நண்ப! நண்ப! உன்னிடம் ஓர் நற்செய்தி சொல்லுகிறேன்; வாஸவதத்தை ஜீவித்திருக்கிறாள்.

விதூ:— ஆ! வாஸவத்தையா! வாஸவதத்தையெங்கே? வாஸவதத்தை இறந்து வெகுகாலமாய்விட்டதே!

உதயனன்:—நண்ப! இல்லை; இல்லை; நான் படுக்கையில் நித்திரைசெய்யும்பொழுது அவள் என்னை எழுப்பிவிட்டுப்போனாள். அவள் முன்னமே தீயில் அழிந்தாளென்று சொன்ன உருமண்வான் என்னை வஞ்சித்தான்.

விதூ:—ஐயோ! இது அசம்பாவிதமல்லவா? உதகைத்தடங்களைப்பற்றி நான்சொன்னதுமுதல் வாஸவதத்தையை நினைத்துக்கொண்டிருந்த நீர் அவளைக் கனவுகண்டிருக்கலாம்.

உதயனன்:—இப்படிக் கனவுகண்டேனா? இது கனவானாற் கனவிலிருந்து விழியாமலிருப்பது என் பாக்கியமாகும்; அல்லது இது ஓர் மயக்கமானால் மயக்கம் என்னிடம் எப்பொழுதுமே இருக்கவேண்டும்.

விதூ:—அரசே! இந்த நகரத்தில் அவந்திசுந்தரி என்றொரு இயக்கி இருக்கிறாள்; அவ்வளை நீர் பார்த்திருக்கலாம்.

உதயனன்:—இல்லை; இல்லை. நான் நித்திரைதெளிந்து எழுந்திருந்ததும் அவளது கற்புவிளங்கும் முகத்தைக்கண்டேன்; கண்கள் அஞ்சனந்துறந்திருந்தன; கூந்தல் நீண்டு தொங்கிற்று.

மேலும், நண்ப! இதோ பார்! பார்! நடுக்கமுற்ற தேவி பலமாகத் தழுவின இந்த என்கையிற் கனவில் அவள்பரிசத்தால் உண்டான ரோமாஞ்சம் இன்னும் நீங்கவில்லை.

விதூ:—அரசே! அனர்த்தத்தைநினைத்தது போதும், வரவேண்டும், அரசே! வரவேண்டும். நாலுகட்டுக்குப்போவோம்.

கஞ்சுகி:—(பிரவேசித்து) அரசருக்கு வெற்றி, எங்கள் தர்சகமஹாராஜா தங்களிடம் தெரிவிக்கிறார்:—"உமது மந்திரி உருமண்வான் பெரிதான சேனை ஆருணியைத் தாக்குதற்கு இதோ வந்திருக்கிறார். யானை குதிரை தேர் காலாள் முதலிய எனது விஜயாங்கம் பிரயாணத்திற்கு ஆயத்தமாயிருக்கிறது. ஆதலால் நீர் புறப்படவேண்டும். மேலும், உமது பகைவர்கள் பிரிவுபட்டார்கள். குடிகள் உமதுகுணங்களில் ஈடுபட்டு நம்பிக்கையுற்றிருக்கிறார்கள். பிரயாணத்திற் பின் பக்கத்தைக் காப்பதற்குக் காவற்படை வகுக்கப்பட்டுள்ளது. பகைவரைத் தொலைப்பதற்குச் சாத்தியமானதெல்லாம் நான் செய்திருக்கிறேன். சேனைகளும் கங்காநதியைத் தாண்டி விட்டன. வத்ஸநாடும் உமது கையில் வரப்போகிறது."

உதயனன்:—ஆகட்டும். நான் இதோ யானைகளும் குதிரைகளும் மிகுதியாய் நிறைந்து உயர்ந்தெழும் அலைகள்போன்று பாணங்கள் பரந்துகிடக்கும் இப்போர்ப்பெருங்கடலில் இறங்கிப் பயங்கரமானசெயல்களில் வல்ல ஆருணியை வதம் செய்கிறேன்.

(எல்லோரும் போதல்)

ஐந்தாம அங்கம் முற்றிற்று.

(தொடரும்.)

ஜி. ஹரிஹரசாஸ்த்ரி,

திருவனந்தபுரம்.

---

ஸ்ரீ:

# கோசர்.

இவ்வியாசத்தை மூன்றுபிரிவாகப்பிரித்து, முதற்பிரிவிற் 'கோசர்' என்ற பதம், 1. துளுநாட்டு வீரகோசஜாதியார், 2. அரசகுடும்பத்தார், 3. நியர்யாதிபதிகள் (அவைபார்) என்ற மூன்றுபொருள்களிற் சங்கத் தமிழிற் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதையும், இரண்டாவதுபிரிவில் அகநானூற்றுப் பதிப்பாசிரியர் 'நால்வகைக்கோசர்' என்று கொண்டதற்கு ஆதாரமில்லை என்பதையும், மூன்றாவதுபிரிவிற் கோசரைக் கொல்வித்த அன்னிமிஞிலிவிஷயமாய்ப் பின்னத்தூர்-நாராயணசாமி ஐயரவர்கள் கொண்ட கருத்துக்கள் மாறுபாடானவை என்பதையும் எடுத்துக் காட்டுகிறேன்.

## I

### 1. துளுநாட்டு வீரகோசஜாதியார்.

"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மலுமயம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலி
தோகைக் காவிற் றுளுநா டன்ன" (அகநானூறு-15)

என்பதிலிருந்து கோசர் என்பார் துளுநாட்டார் என்று தெரிகிறது.

"அருந்திறற் கடவுட் செல்லூர்க் குணாஅது
பெருங்கடன் முழக்கிற் றாகி யாண
ரிரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியம மாயினு
முறுமெனக் கொள்குந ரல்லர்
நறுநுத லரிவை பாசிழை விலையே" (அகநா-90)

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்
கழனி யுழவர் குற்ற குவளையும்
கடிமிளைப் புறவிற் பூத்த முல்லையொடு
பல்லிளங் கோசர் கண்ணி யயரு
மல்லல் யாணர்ச் செல்லி" (அகநா—216)

என்பவற்றிலிருந்து இவர்களுடைய முக்கியமானவூர் 'ஸ்ரீபரசுராமன்—செல்லூர்' என்று அறியலாம்.

'மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்' (அ—15) என்பதிலிருந்து இவர்கள் மெய்ந்நிறைய ஆபாணமணிவார்கள் என்று தெரிகிறது.

1. 'கோசர் நியமமாயினு முறுமெனக் கொள்குந ரல்லர்' (அ-90), 2. 'கோசர்....வளங்கெழு நன்னாடன்ன' (அ—113), 3. 'வளங்கெழு கோசர்...விழுநிதி' (அ—205), 4. 'மல்லல் யாணர்ச் செல்லி' (அ-216) என்பவற்றால் இவர்கள் மிக்க செல்வவளமுடையாரென்று தெரிகிறது.

'சேண்விளங்கு நல்லிசை...கோசர்' (அ—205) என்பதால் இவர்கள் வெகுதூரம் பாவிய கீர்த்தியையுடையாரென்று தெரிகிறது.

'வாய்மொழி நிலைஇய சோசர்' (அகம்-205) 'ஒன்றுமொழிக்கோசர் போல, வன்கட்சூழ்ச்சியும்' (குறுங்-73) 'நல்லூர்க்கோசர் நன்மொழி போல வாயாகின்றே' (குறுங்—15) என்பவற்றால், கோசர், ஸத்தியஸந்தர், பிரதிஜ்ஞையை நிறைவேற்றுபவர், நிறைவேற்றப்படுந் தீர்மானங்களைச்செய்பவர் என்ற விஷயங்களை யறியலாம்.

"நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியிற்
புன்றலை மடப்பிடி யகவுநர் பெருமகன்
மாவீசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக் கைந்நிறுத்த பல்வேற் கோசர்
இளங்கட் கமழு நெய்தலஞ் செறுவின்
வளங்கெழு நன்னா டன்ன என்தோள்" (அகம்—113)

என்பதை உட்கொண்டு அகநானூற்றுப்பதிப்பாசிரியர் "கோசர், 'நன்றல்காலையு நட்பிற்கோடாராய்ச் சென்றுவழிப்படூஉம் திரிபற்ற அறிவையுடையார், அகம். 113." என்று எழுதியிருக்கிறார். (அரசர்முதலியோர் வரலாறு பக்-47.)

மேற்செய்யுளுக்குப் பின்வருமாறும் பொருள்கொள்ளலாம். அது,—

பெருமகனாகிய அஃதை, தான் நன்றல்லாத காலத்தும் (சிறுமைப் பட்டிருக்கும் காலத்தும்) 'நட்பிற் கோடாத சுபாவத்தையுடைய பெரி

யோர்' தன்னிடம்வந்து வழிபடும்படியான திரிபில் சூழ்ச்சியனுயிருந் தான் ; என்பதாம்.

இப்பொருளில் நட்பிற்கோடாரென்பது கோசரைக் குறிக்காது பொதுவாகப் பெரியோரைக்குறித்தது என்று கொள்ளப்பட்டது. 'திரிபில் சூழ்ச்சியின்' என்பதையும் கோசருக்குச் சேர்க்காமல் அஃதைக்குச் சேர்க்கப்பட்டது.

இனி, இவர்கள் வீரத்தைப்பற்றிப் பேசுவோம்:—

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர் நியம மாயினும்" (அகம்–90)

என்பதிலிருந்து யுத்தத்திற்பட்டகாயங்களை ஆபரணமாகக்கொண்டவர்களென்றும், அச்சமுண்டாக்கும்படியான பார்வையுடையாரென்றும் அறியலாம்.

"மாவீசு வண்மகிழ் அஃதைப் போற்றி
காப்புக் கைந்நிறுத்த பல்வேற் கோசர்" (அகம்–113.)

என்பதால் அஃதை என்பான் இவர்களைத் தன்னாட்டிற்குக் காவலாகக் கொண்டானென்று தெரிகிறது. (இவர்களுதவியாற்றான் அஃதை ஆயெயினனது பல்வேண்மகளிர்பூசல் களைந்தான்போலும்?)

"நன்ன னறுமா *கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே" (குறுங்-73)

என்பதிலிருந்து பிரசித்திபெற்ற நன்னனையும் நாட்டிலிருந்து துரத்திய வீரமுடையாரென்று தெரிகிறது. (இவன் பெண்கொலைபுரிந்தநன்னன் போலும்! அப்பெண் தின்ற 'புனறருபசுங்காயும்' இந்நறுமாவினதுதான் போலும். குறுங். 292)

" வாய்மொழி நிலைஇப சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி

* 'செய்தி கொன்றோர்க் குய்தி யில்லை' (புறம். 34) 'காடுகொன்று, நாடாக்கி'(ப-பாலை) என்பவற்றிறபோல 'நறுமா கொன்று நாட்டிற்போக்கிய' என்பதற்கும் நறிய மாமரத்தை அழித்து என்று கொள்ளலாம்.

நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி
பூவிரி நெடுங்கழி நாப்பட் பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந் தயர்மா ரேமுற
விழுநிதி யெளிதினி னெய்துக தில்ல" (அகம்-205 நக்கீரர்)

என்பதிலிருந்து வாய்மொழிநிலைஇய சேண்விளங்கு நல்லிசை வளங் கெழு கோசர், பொலம்பூட் கிள்ளியின் விளங்குபடை நூறி, அவன் காவிரிப்பூம்பட்டினத்தையும் கைக்கொண்டார்களென்று தெரிகிறது *.

"வெல்கொடித், துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வறைவா யும்பர்
நிரம்பா நீளிடைப் போகி
யரம்போ ழவ்வளை நிலைநெகிழ்த் தோரே"

(அகம். 251 பாலை-மாமூலனார்)

என்பதிலிருந்து இவர்கள் தொன்மூதாலத்தரும்பணைப்பொதியில் தெம்முனைசிதைத்தார்களென்று தெரிகிறது.

அகம்-251-ம் செய்யுளில் வெல்கொடித் துனைகாலன்னபுனைதேர்க் கோசர் தெம்முனைசிதைத்தஞான்றை மோரியர் அறைவாய்குறைத்தா ரென்றிருக்கிறது. அகம் 281ல் 'முரண்மிகுவடுகர் முன்னுற மோரியர் தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு' என்றிருக்கிறது. இவ்விரண்டி லும் மோரியருக்குமுன் கோசரும் வடுகரும் கூறப்பட்டிருப்பதால் இவ் விருவரும் ஒருவரே என்றுகொள்ளினும் கொள்ளலாம்†.

---

* இதற்கு, மாறாகவும் பொருள்கூறுப. Nos. 41 & 81 அரசர்முதலியோர் வாலாறு-அகம்.

† ஸ்ரீமான். K. G. சங்கரையரவர்கள் வெவ்வேறாகக்கொண்டார்கள்; Part iv. 1926. I. R. A. S.

இளம்பெருஞ்சென்னியென்பான் 'செம்புறழ்புரிசைப் பாழிநூறி, வம்பவடுகர் பைந்தலை சவட்டி'னு னென்று அகம் 375ல் கூறியிருக்கிறது. இப்பாழியும் கோசர் செல்லூரும் சமீபமாயுள்ளன. இதனாலும் கோசர் வடுகரோ என்ற சந்தேக மேற்படுகிறது. அப்படியானால் துளுநாட்டில் அக்காலத்திற் பேசப்பட்டபாஷை வடுகோ என்ற சந்தேகமு மேற்படும்.

2. ராஜகுடும்பத்தைச்சேர்ந்தவர்கள்.

"...............................வேன்வேல்
இளம்பல் கோசர் விளக்குபடை கன்மார்
இகலின ரெறிந்த வகலிலை முருக்கின்
பெருமரக் கம்பம் போல
பொருநர்க் குலையா நின்வலன் வாழியவே" (புறம். 169.)

"பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் றலைவனாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இயனெறி மரபினின் வாய்மொழி கேட்ப"

(மதுரைக்காஞ்சி. வரி. 771-74)

கொங்கிளங்கோசர் (சிலப்-உரைபெறு-2)

அரசிளஞ்சிறுர் தங்களுக்குட் பந்தயம்போட்டுக்கொண்டு மூள்முருக்கைமரத்தில் அம்பெய்வார்கள் என்ற முதன்மேற்கோளிலிருந்தும், சேனுபதி மாறனைத் தலைமையாகவுடையவீரர்களாகிய அரசிளம்பந்துக்கள் நெடுஞ்செழிய னுத்தரவுக்கடங்கிக் கீழ்ப்படிந்துநடக்க என்றஇரண்டாவது மேற்கோளிலிருந்தும் தலைப்பிற்கண்டபொருள் கிடைத்தல் காண்க.

3. நியாயவிசாரணைக்காரர்.

புறம் 283ல் 'வலம்புரிக் கோச ரவைக்களத் தானு, மன்றுளேன் பது' என்று வந்திருப்பதாற் கோசர் சபைகூடி நியாயம்விசாரிப்போரென்று தெரிகிறது. இதற்குப் பொருத்தமாய், அகநானூற்றிற் காணப்படும் விருத்தாந்தமொன்றை இங் கெடுத்துக்காட்டுகிறேன்.

ஒரூரில் ஒருவன், பயறுவிளைந்தநிலத்திற் றன்பசுக்களைவிட்டு மேய்த்துவிட்டான். அதனுற் கோபம்கொண்ட நியாயவிசாரணைக்காரராகிய 'ஊர்முதுகோசர்,' அவன்கண்ணைப் பிடுங்கிவிட உத்தரவுசெய்து

விட்டார்கள். அவர்கள்மொழி, 'ஒன்றுமொழி'யானதால் அவ்வுத்தரவு மாற்றப்படாமல் 'வாயாகி' நிறைவேறியது. அதனுற் கோபங்கொண்ட (குற்றவாளியின்மகளாகிய) அழுந்தை-அன்னிமிஞிலி*யென்பாள் பழிக்குப்பழிவாங்கநினைத்து, அது நிறைவேறும்வரை கலத்திலுண்ணுமலும், வெளியதுடாமலும், சினப்படிவங் கொண்டவளாய்த் திரிந்து கொண்டிருந்து கடைசியிற் கோற்றக்குறும்பியனுகிய திதியனிடம்† முறையிட்டு, அவனைக்கொண்டு, அவரைக் கொல்வித்துக் கோபமாறி, அதன்பின்பே செருக்கித் தருக்கி நடந்துலாவலானுள்; இவற்றிற்கு மேற்கோளாகப் பரணரின் அகச்செய்யுட்கள் வருமாறு:—

" .........................தந்தை
கண்கவி னழித்ததன் றப்பற் றெறுவர
வொன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதிய னழுந்தைக் கொடுங்குழை
யன்னி மிஞிலியி னியலு
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே" (196)

" முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட வுழவுறு செஞ்செ
யிடுமுறை நிரம்பி யாகுவினைக் கலித்துப்
பாசிலை யமன்ற பயறு புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந் தருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்து முண்ணுள் வாலிது முடாஅள்
சினத்திற் கொண்ட படிவ மாறுள்
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவிய னன்மான் றிதியற் குரைத்தவ
ரின்னுயிர் செருப்பக் கண்டுசின மாறிய
வன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்
தானு வுவகையே மாயினேம்." (262)

---

*மிஞிலியை ஆணுகக்கொண்டார் செங்குட்டுவன் என்ற நூலாசிரியர். பக்-184. F. N.

† குறும்பியனையும் திதியனையும் இருவராகக்கொண்டார் அகநானூற்றுப் பதிப்பாசிரியர். வரலாறு பக்-39.

என்பவற்றிற் கூறிய செய்யுளில் 'ஊர்முதுகோசர்' என்று வந்திருப்பதால் இவர்கள் துளுநாட்டுக் கோசஜாதியாரல்லரென்றும் ஒவ்வொரு கிராமத்திலும் பொதியிலிலிருந்து நியாயம்விசாரிக்கும் பெரியோருக்குக் கோசர் என்ற பெயருண்டென்றும் தெரியலாம்.

"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே! தோழி ஆய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கைம் மடந்தை நட்பே."

(குறுந்தொகை—15, பாலைபாடிய பெருங்கடுங்கோ)

கோசர் என்பது, இங்கு, நியாயவிசாரணைக்காரர். அவையாருடைய தீர்ப்பு எப்படி உண்மையாகுமோ அப்படி இவர்கள்நட்பும் உண்மையாயிருந்தது. தொன்மூதாலத்துப்பொதியில் கிராமத்தெருவின்கோடியிலுள்ள ஆலமன்றம். இது ஊர்தோறுமிருப்பது. பொதியின்மலைப்பக்கத்துக் குற்றாலம்போன்ற ஒருகுறிப்பிட்ட இடத்தைக் குறிக்கவந்ததன்று. பின்னைப் 'பறைபடப் பணிலமார்ப்ப" என்ற தென்னையெனின், இவ்வவையார் நியாயம்விசாரிக்க வந்து உட்காரும்போது 'பறைபடப் பணிலமார்ப்பத் தோன்றி இறைகொள்'வார்கள். (த ங் கு வ ா ர் க ள்). 'வலம்புரிக்கோச ரவைக்களத்தானு மன்றுளென்பது' என்னும் புறநானூற்று 283-வது செய்யுளில் 'வலம்புரி' யென்று வந்திருப்பதையும் காண்க. இச்செய்யுளில் 'நல்லூர்க்கோசர்' என்றது ஒவ்வொரு ஊரிலுமுள்ள கோசராகிய அவையாரை. இச்செய்யுளில் மோகூர், மோரியர் முதலிய பதங்களில்லாமையால் இங்குக் கோசர், மோகூரைவெல்வதற்கு வம்பமோரியரின்முன், இயல்பாகவே படையெடுத்துவந்திருந்த வடநாட்டுக்கோசஜாதியாரல்லர். அன்னிமிஞிலி கதையில் 'ஊர்முதுகோசர்' (அகம்-262) என்றதும் காண்க. 'பல்வேற் கோசர்' என்பதுபோன்று, அவர் வீரத்தைக் குறிக்கும் அடைமொழிகள் பெய்யப்பெறுமையும் காண்க.

இக்கோசர்* கிராமசபைகளிற்போல அரசசபைகளிலும் அவையாராய்வீற்றிருந்தார்கள்.

---

*உத்தியோகப்பெயர்.

"மழையொழுக் கறுப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
*நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎங் தோன்றிய நாற்பெருங்குழுவுப்" (ம-கா-507-510)

இங்கு மதுரைச்செழியனுடைய நாற்பெருங் குழுவுக்கும் பழையன்மோகூ ரவைக்களத்தை நாள்தோறும்வந்திருந்து விளக்கும் கோசர், உவமிக்கப்பட்டுள்ளார். 'அவைபகம் விளங்க' என்று வந்திருப்பதால் இங்குள்ள கோசரும் 'நீதியறைவோரே' என்பது தெளிவு. நான்மொழிக் கோசர் — நான்கு பாஷைகளை அல்லது சாத்திரங்களை அறிந்த கோசர்.

நன்னனை நாட்டினின்று துரத்திய கோசரையும் அறஅவையாராகக் கொள்ளலாம் (குறுந்–73).

## II

கோசர் இடம்பற்றி நால்வகைப்பிரிவினராயிருந்தார்களா?

"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி.......நட்பே" (குறுந்–15.)

இப்பாட்டின்கீழ், உரையில், நாலூராராகிய 'திருக்கண்ணபுரத் தலத்தான் திருமாளிகைச் சௌரிப்பெருமாளையன் அரங்க'னென்பார் "நாலூர்—என்பதூஉம் பாடம்; அதுவும் ஊரின்பெயர்போலும்" என்றெழுதியிருக்கிறார்கள்.

அகநானூற்றுப் பதிப்பாசிரியர் இவ்வுரைக்குறிப்பிலுள்ள பாடபேதத்தைச் சிறந்ததா யுட்கொண்டு, "நாலூர்க்கோசர் (குறுந்–15) எனப்படுவார். அகத்தில் துளுநாட்டுக்கோசர்; செல்லூர்க்கோசர்; பொதியிற்கோசர்; (அகம்-15, 90, 251) எனபார் கூறப்பட்டுள்ளார்" என்றெழுதியுள்ளார் (அரசர் முதலியோர் வரலாறு பக்: 47).

இக்குறிப்பிலிருந்து, நான்கு ஊர்களிற் கோசர்கள் வாழ்ந்தார்களென்றும் அவற்றில் மூன்று ஊர்களின்பெயர் அகநானூற்றிலிருந்து

* நன்மொழி (குறுந்.)

தெரிகிறதென்றும் இன்னொரு ஊர்ப்பெயர் தெரியவில்லையென்றும் அக நானூற்று வரலாற்றாசிரியர் கருதினரென்று தெரிகிறது. நாலூரை ஓரூர்ப்பெயராகக் கொள்ளவில்லையென்றும் தெரிகிறது.

"நல்லூர்க்கோசர்" என்ற பாடமே சிறந்தது. இப்பாடமே பாட்டின்மத்தியிற் காணப்படுவது. ஐயங்காரவர்கள் (கு.தொ. 73-வது பாட்டினுரையில்) இம்முழுப்பாட்டையும் உதாரணமாகக் காட்டியவிடத்தும் 'நல்லூர்' என்ற பாடமே கொண்டிருக்கிறார்கள். 'ஊர்முதுகோசர்' என்று அகம் 262-ல் கிராமப்பொதியில் விசாரணைக்கர்த்தர்களைக் குறித்ததுபோல, இங்கும் 'நல்லூர்' என்பது பொதுவாக ஊர்களைக் குறித்தது. இதையனுசரித்துப் பாட்டுமுழுவதுக்கும் திரண்ட பொருள் மேலே எழுதப்பட்டது.

ஸ்ரீமான்—அரங்கசாமி ஐயங்காரவர்கள், உரைக்கீழ்க்குறிப்பிற்கூறிய 'நாலூர்' என்ற பாடமே கொள்ளத்தக்கதெனின், சுற்றுப்பக்கத்து நாலூர்களிலுமிருந்துவந்த கோசரென்றாவது நாலூரென்னுமூரிலிருந்த கோசரென்றாவது பொருள்கொண்டு 'ஊர்முதுகோசர்' என்பதுபோலக் கொள்க.

இனி, அகநானூற்றுப் பதிப்பாசிரியர் கருதியபடி கோசர்குழுவினர் நான்குபகுப்பினராய் நால்வேறிடங்களில் நியதமாய்வாழ்ந்தார்கள் என்பதில்லையென்று காட்டுவேன்.

செல்லூர்* துளுநாட்டினுட்பட்ட ஓரூராதலால், செல்லூர்க்கோசரென்றும் துளுநாட்டுக்கோசரென்றும் இருவகைக் கோசர்கொண்டது பொருந்தாது. ஓரூர்க்கோசருக்கோ இருந்தவிடம் தெரியாததால், அவ்வூர்ப்பெயர் அகநானூற்று வரலாற்றாசிரியரால் எடுத்துக்காட்டப்படவில்லை. இனி நான்காவதாகப் 'பொதியிற்கோசர்' என்று சொல்லப்பட்டவர், தனிக்குழுவாய்ப் பொதியிலிலே நியதமாய்வாழாது, பொதியிலார்க்கு உதவும்பொருட்டுச் சென்ற துளுநாட்டுக்கோசரென்றாவது பொதியிலைப் பரம்பரையாய்ச் சொந்தமாகவுடைய (இந் நால்வகைக்கோசர்பிரிவுக்குச் சம்பந்தப்படாத) அத்தேசத்து 'ராஜாங்கஉத்தியோகஸ்தர்' என்றாவது கொள்க.

---

*கும்பகோணம் கவர்ன்மெண்டுகாலேஜ் பத்திரிகையில் என்னுடைய 'செல்லூர்' என்னும் வியாசத்தைப் பார்க்க.

துளுநாட்டுக்கோசரின் ஓர்பிரிவார், பொதியிலிலேவாழ்ந்து 'போதியிற்கோசர்' என்று அழைக்கப்படவில்லை. அவர்கள் பொதியிற் சுதேசிகளுக்கு உதவிசெய்யும்பொருட்டுவந்தவர்களே என்ற கருத்துக்கொண்டு அகம்-251, குறுங்-15, ம-காஞ்சி. 507–510 வரி என்பவற்றுக்குப் பொருள் கூறப்படுகிறது.

பொதியிலார் துளுநாட்டுக்கோசரை உதவிக்கு அழைத்திருக்கக் கூடும். அவர்களும் வருகிறேமென்று வாக்குத்தத்தம் செய்திருக்கக் கூடும். அந்த வாக்குப் பிழைபாமல் அவர்கள் பொதியிலிற் குறிப்பிட்ட காலத்தில் வந்துதோன்றியதைத்தான்,—

"பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே! தோழி! யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கைம் மடந்தை நட்பே" (குறுங்-15)

என்று சொன்னதாகக் கொள்ளலாம்.

"பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமேஎங் தோன்றிய நாற்பெருங் குழுவும்" (ம-கா-507-510)

இதற்கும் மேற்சொன்னகருத்தேபடப் பொருள்கொள்க.

"....................................வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்

புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய அறைவாய்† உம்பர்" (அகம்-251).

முன்கூறியதுபோல, பொதியிலார்க்கு, உதவிசெய்யவருகிறோ மென்று சொல்லியனுப்பியபடியே வந்திருந்து 'இன்னிசைமுரசங் கடிப்பிகுத்திரங்கத் தொன்மூதாலத் தரும்பணைப்பொதியிலிற் புனை தேர்க்கோசர்' முன் படையெடுத்துவந்த வடுகரை (அகம்-281)த் தெம் முனைசிதைத்தனால் அஞ்ஞான்று‡மோகூர் (பொதியிலையடுத்ததுபோலும்) பணியாதாக, வடுகரை முன்னனுப்பியிருந்த மோரியர் பின்வந்தாரெனக. இதனால் மோகூர்க்குக் கோசர் உதவிசெய்தாரென் றறிக. மேற்காட்டிய மதுரைக்காஞ்சியடிகளிற் 'பழையன்மோகூர் அவையகம்விளங்க, நான் மொழிக்கோசர்தோன்றியன்ன' என்று அநுகூலராயே கூறப்பட்டிருத்தலும் காண்க. (இதைப்பற்றி முன்னெழுதியவர்களெல்லாரும் கோசரைப் பொதியில்மோகூரானுக்குவிரோதிகளென்றுகருத்துப்பட எழுதியுள்ளார்கள்.)

இதுவரை எழுதியதிலிருந்து துளுநாட்டுக்கோசர் ஒருகுறிப்பிட்ட காரியத்துக்காகத் தாங்கள் சொல்லியனுப்பியபடி பொதியிலுக்குச் சொன்னசொற்றவறாமல்வந்தாரென் றேற்படுவதால் "பொதியிற்கோசர்" என்று தனிவகுப்பாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

இனி நான் மேலெழுதியபடி கோசர் என்பார் பொதியிலுக்குரிய வரே. துளுநாட்டுக்கோசரைச்சேர்ந்தபிரிவினரல்லர்; துளுநாட்டுக்கோச ரைப்போல ஒருஜாதியாரல்லர். அவையை அலங்கரிக்கும் ராஜாங்க

---

† நாகர்கோயிலுக்கும் பணக்குடிக்கும் மத்தியிலுள்ள 'ஆராமொழிக்கண வாய்' என்பதன் முதற்பாகம், 'அறைவாய்' என்பதன் சிதைவு என்று ஸ்ரீமான் ரங்கசுவாமிசரசுவதியவர்கள் 'Journal of Indian History' சஞ்சிகையொன் றில் எழுதினது மிகவும் பொருத்தமானது. ஆனால் மொழியென்பது சரியாய் விளங்கவில்லை. திருநெல்வேலிஜில்லாவின் தென்கிழக்கில் 'தேரி' என்று சொல்லப்படுகிற செம்மண்மலைமேட்டு வனப்பிரதேசத்திலுள்ள 'நங்கைமொழி' இட்டமொழி, குதிரைமொழி, முதலியஇடங்களின்பெயர்களிலுள்ள 'மொழி' என்பவற்றைப்போல 'ஆராமொழி' என்பதிலுள்ளமொழியையும் இடத்தைக் குறிப்பதாய்க் கொள்ளலாம். முளியென்றும் வழங்குவர்.

‡ 'மோகூர்' என்பதை மனிதன்பெயராகக்கொண்டார் ஸ்ரீமான் K. G. சங்கரையரவர்கள், Part IV, I. R. A. S. 1924.

உத்தியோகஸ்தர்கள். அரசபரிதுக்களாயினுமாவர் என்ற கருத்தையநு சரித்து மேற்கண்டபாடல்களுக்குப் பொருள்கூறுவேன். இப்பொருள் முன்காட்டியபொருளினும் சிறந்தது.

மோகூரனிடத்து விசுவாசமுடையவர்களும் அவனுக்குக் கீழ்ப் பட்டவர்களும் அவன்ராஜாங்கத்தைச் சேர்ந்தவர்களுமாகிய நல்லூர் (பொது)க்கோசர்கூட்டத்தார் நாங்கள் உதவிசெய்யத் தவறாமல்வருவோ மென்ற 'நன்மொழி' பிழைபாமல் 'பறைபடப் பணில மார்ப்பவிறை கொள்பு தொன்முதாலத் துப் பொதியிற்றோன்றி'யதைத் தோழி அவர்கள் 'நன்மொழிபோல வாயாகின்று'என்றாள். (குறுந்-15)

'பழையன்மோகூர் அவையகம்விளங்க நான்மொழிக்கோசர் தோன்றி யன்ன' என்னும் மதுரைக் காஞ்சிபடிகளுக்கும் கீழுத்தியோகஸ்தரும் தன்னைச்சேர்ந்தவர்களுமாகிய கோசர், அவனைக் காட்டிக்கொடாமல் யுத்தசன்னகராய் அவனுக்கு உதவிசெய்ப அவையகத்தில்வந்து விளங்கி னார்களெனக.

அகம் 251க்கும் மோகூரவைக்களத்தைச்சார்ந்த புனைதேர்க் கோசர், பொதியிலில் இன்னிசைமுரசங் கடிப்பிகுத்திரங்க வடுகர் தெம்முனைபைச் சிதைத்ததனாற் றங்கள்எஜமானனுகிய மோகூரனுக்கு ஜயம்உண்டாகத் தோற்றுப்போன வடுகரின் எஜமானராகிய மோரியர் வரநேரிட்டது என்றும் கருத்துக்கொள்க.

இவ்விரண்டாவது மாதிரிப்பொருளினும் "பொதியிற்கோசரென் பார், நால்வகைப்பிரிவினரென்று கொள்ளப்பட்ட துளுநாட்டுக்கோச ரின் ஒருவகைப்பிரிவினர்" என்னுங் கருத்துச் சிதைதல்காண்க

கோசர் நால்வகைப்பிரிவினரல்லர், பொதியிற்கோசர் அவர் களு ளொருவரல்லர், என்றுகாட்டுவதற்காக மேற்கண்டமேற்கோள்க ளுக்கு இப்பிரிவில் இருவிதமாய்ப் பொருளெழுதியபோதிலும், அவைக ளுக்கு முற்பிரிவி லங்கங்கே தனித்தனி யமைத்துக்காட்டிய முற் பொருளே சிறந்ததாகும். இடம் மாறியிருப்பினும் பெரியோர் ஏற்ற பெற்றியமைத்துக்கொள்க. டாக்டர் S. கிருஷ்ணசுவாமிஐயங்காரவர்கள் M.A. (University professor of Indian History & Archæology) Part iv J. R. A. S-1923ல் எழுதிய 'கோசர்' என்னும் வியாசம் இவ்வியாசத்திற்கு உற்றதுணையாய்நின்று உதவிசெய்தது.

III

பின்னத்தூர் நாராயணசாமிஐயரவர்கள், நற்றிணை-பாடப்பட்டோர் வரலாறு 86ம் பக்கத்தில் (நான் முதற்பிரிவில் 'நியாயவிசாரணைக்காரர்' என்ற மூன்றுவது பாகத்தில் எடுத்துக்காட்டிய) கோசர்சம்பந்தப்பட்ட அன்னிமிஞிலிகதையையும், வேறொரு அன்னியென்பவனுடையகதை யையும், ஒன்றாகநினைத்து எழுதியிருக்கும் சில மாறுபாடுகளை இங்கே காட்டுகிறேன்.

'திருவழுந்தூரிலிருந்த திதியனுக்குரியதும்' என்று புன்னைமரச் சண்டைவிஷயமாய் எழுதியிருக்கிறார்.

புன்னைமரச்சண்டைவிஷயமாய்த் திதியனைக்குறிக்குமிடங்களில் அழுந்தையின்சம்பந்தம் திதியனுக்குக் கூறப்படவில்லை.

'அப்போரில் திதியன்வெற்றிகொண்டு அன்னியைப்பற்றி அவன் கண்ணைப்பிடுங்கிவிட்டான். (அகம். 196)' என்றார்.

" ....................................தந்தை
கண்கழி னழித்ததன் றப்பற் றெருவா
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதிய னழுந்தைக் கொடுங்குழை
அன்னி மிஞிலியி னியலு
நின்னலத் தகுவியை முயங்கிய மார்பே" (அகம்-196)

இப்பாட்டிலிருந்து திதியன், அன்னிகண்ணைப்பிடுங்கினதாக ஏற்படவில்லை. இச்செய்யுளின்கருத்து: திதியனுடைய அழுந்தையில் வாழ்ந்த அன்னிமிஞிலியென்பாள் தன்தந்தையின் (இவன்பெயர்கூறப் படவில்லை) கண்ணைப்பிடுங்கிய கோசரைக் கொன்றுமுரண்நீக்கினாள் என்பதாம்.

ஐயரவர்கள் 'அப்போரில்'என்றது புன்னைகாரணமாக ஓர் திதியனுக் கும் (அழுந்தைத்திதியனென்று அவ்விருத்தாந்தத்தைக்குறிக்கும் செய் யுட்களினின்று தெரியவில்லை) அன்னியென்பானுக்கும் நடந்தகுறுக்கைப் பறந்தலைச் சண்டையை. என்கிறார். இந்தச்சண்டை அவர்கள்காட்டிய அகம்-196-ல் பிரஸ்தாபிக்கப்படவில்லை. ஆனால் அதில் பிரஸ்தாபிக்கப்

படும் கதை யென்னெனின், அன்னிமிஞிலியென்பாளுடைய தந்தை யானவன், ஒரு பயற்றஞ்செய்யில் ஆவைவிட்டு மேய்த்துவிட அதனாற் கோபங்கொண்ட ஊர்முதுகோசர் அவன்கண்ணைப் பிடுங்கிவிட்டார்கள். அதனால் அவன்பெண் மிஞிலி வருந்தித் திதியனுதவியா லவர்களைக் கொன்று வருத்தந்தீர்ந்து களித்திருந்தாள் என்பதாம். (இது முன்னும் எழுதப்பட்டது)

இருவேறுசண்டையின்விருத்தாந்தங்களை ஐயரவர்கள் ஒன்றாகக் கொண்டார்கள். அன்னிமிஞிலியின்தந்தையென்றுமாத்திரம் கூறிப் பெயர்கூறாமலிருக்க, அத்தந்தையின்பெயரை அன்னியென்றுகொண்டு, புன்னைமரச்சண்டையிற் சம்பந்தப்பட்ட வேறொரு அன்னியோடு அவனை ஒற்றுமைப்படுத்தியது பொருந்தாது.

'அன்னியின்புதல்வனாகிய மிஞிலியென்பவன்' (அகம்-262) என்றார்.

அச்செய்யுளில் 'அன்னிமிஞிலி' என்றுமாத்திர மிருக்கிறது. அன்னியைத் தகப்பனென்றுகொள்ள யாதோராதாரமு மில்லை. 'தந்தையைக் கண்களைந்து' என்றுமாத்திரமிருக்கிறதேயொழியப் பெயர் கூறப்படவில்லை.

மிஞிலியை ஆணாகக்கொண்டது பிழை. பெண்ணாகக்கொள்ள வேண்டும். 'உண்ணாள், உடாள், படிவமாறாள்' என்று மேற்படி செய்யுளில் வருதல் காண்க. மேற்காட்டிய 196-ம் செய்யுளிலும் 'கொடுங்குழை—அன்னிமிஞிலி' என வந்திருப்பதையுங் காண்க. அச் செய்யுளின் கடைசிமுடிவையுங் கவனிக்க. (கிழத்தி தலைமகனுக்குக் கூறுகிறாள்: "அன்னிமிஞிலியைப்போற் செருக்கிடக்கும் (நினக்கியைந்த) பரத்தையைத் தழுவிய நின்மார்பை நான் தொடேன்")

'வெற்றிமிக்க குறும்பியனென்பவனாற் றிதியனை மரபோடழியக் கொல்வித்து மிக்க மகிழ்ச்சியுடையனாகித் திருவழுந்தூரிற் பெரிய ஆரவாரத்தோடு சென்றுவந்தானென்பதாம்' என்று எழுதியுள்ளார்கள்.

"மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவிய னன்மான் றிதியற் குரைத்தவ
ரின்னுயிர் செகுப்பக் கண்டுசின மாறிய

அன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்
தானு வுவகையே மாயினேம்" (அகம்-262)

என்பதிலிருந்து தெரிவது அன்னிமிஞிலியென்பாள், பயற்றஞ்செய்ச் சண்டையைக் கொற்றக்குறும்பியனாகிய திதியற்குரைத்துத் தன்தந்தையின்கண்ணைக்கெடுத்த கோசரின் உயிர்செகுத்து உவந்து களித்தாளென்பதே யொழியக் குறுக்கைப் புன்னைமரச்சண்டைக்குரிய அன்னியென்பான் குறும்பியனென்பவனால் திதியனை மரபோடழியக் கொல்வித்தானென்பதல்ல.

"திதியனொடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்லோ நீயே" (அகம்-126)

என்பதால் அன்னி, திதியனொடு (குறும்பியனென்பவனா லல்லாமல்) நேரிற்பொருது விளிந்தானென்றுகூறியிருக்க, 'மிக்கமகிழ்ச்சியுடையனாகித் திருவழுந்தூரிற் பெரியஆரவாரத்தோடு சென்றுவந்தான்' என்றெழுதியது பொருந்தாமைகாண்க. (அது அன்னிமிஞிலியைக் குறித்தது).

பயற்றஞ்செய்ச்சண்டையில் அழுந்தைத்திதியன் அன்னிமிஞிலிக்குதவியாய்க் கோசரைக் கொன்றான்.

குறுக்கைப்புன்னைமரச்சண்டையில் ஒருதிதியன் அன்னியென்னுமொருவனைக் கொன்றான்.

புன்னைமரச்சண்டைக்குரிய அன்னியைப் பயற்றஞ்செய்ச்சண்டையிற் சம்பந்தப்பட்ட அன்னிமிஞிலியின் தகப்பனாக மயங்கி, விஷயங்களை யுற்றறியாததனா லிவ்வளவுகுழப்பம் நேர்ந்தது.

பயற்றஞ்செய்ச்சண்டையைக்குறிக்கும், அகம்-196, 262-ம் செய்யுட்களின்கருத்தையும், குறுக்கைப்பறந்தலைப் புன்னைமரச்சண்டையைக்

குறிக்கும் அகம் 45, 126, 145-ம் செய்யுட்களின்கிருத்தையும் கவனித்துப்பார்த்தா லுண்மை வெளிப்படும்.

இவ்வாறு ஐயரவர்கள் எழுதிய மாறுட்டங்கள் வேறுசிலவற்றை நான் கும்பகோணம் காலேஜ் மாகஸீனில் எழுதிய 'செல்லூர்' என்னும் வியாசத்திலும், செந்தமிழில் வெளிவந்த (தொகுதி-உச. பக்கம் சசஅ-சசுசு) 'நன்னன்'என்னும் வியாசத்திலும் காட்டியிருக்கிறேன்.

வித்வான் A. M. சடகோபராமாநுஜாசார்யன்,
கவர்ன்மெண்டுகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதன்,
கும்பகோணம்.

---

# மதிப்புரை.

திருச்சிநேசன்:—இது திருசிரபுரத்திலிருந்து மாதம் இருமுறை வெளிவரும் ஒருதமிழ்ப்பத்திரிகை. ஸ்ரீபார்த்தஸகன் என்பார் இதன் ஆசிரியராவர். இதில் அரசியல்விஷயங்களும், பொதுவர்த்தமானங்களும், பெரியார் ஜீவியசரிதமும் பிறவும் வெளியிடப்படுமென்று தெரிகிறது. இதன் வருடச்சந்தா ரூபா மூன்று. வேண்டுவோர் ஸ்ரீபார்த்தஸகன், திருச்சிநேசன் ஆசிரியர், ஆண்டார்தெரு திருச்சி என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

அச்சுத்தொழில்:—காரைக்குடியிலிருந்து மாதமொருமுறைவெளிவரும் இதன் முதற்பகுதி கிடைத்தது. அச்சுத்தொழிலும் அத்தொழிலாளரும் அபிவிருத்தியடையுமாறு முயல்வதே இதன் நோக்கமாகும். இதில் ஆங்கிலத்திலுள்ள அச்சுத்தொழிலிலக்கணங்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படுமென்று தெரிகிறது. இம்முதற்பகுதி சுத்தத்தமிழ்ச்சொற்களாலாய இனிய உரைநடையுடன் திகழ்கின்றது. இதன் வருடச்சந்தா ரூபா இரண்டு. வேண்டுவோர் இதன் உரிமையாளராகிய தி. மு. ஆறுமுகம அவர்களுக்கு எழுதிப்பெறலாம்.

---